பாலர் கல்வி

தொகுதி 28	சோபகிருதுஸ்ரீ புரட்டாசி - ஐப்பசிமீ 1963 அக்டோபர்	பகுதி 7

தலையங்கம்

பாராட்டுகின்றோம்

மாண்பு மிக்க அமைச்சர் உயர்திரு. M. பக்தவத்ஸலம் அவர்கள் சென்னை மாநில முதலமைச்சராகத் தேர்வு பெற்றதற்காக அவரை நாம் பாராட்டு கின்றோம். சென்னை மாநிலத்திலே அரசியலிலுஞ் சமூகத்தொண்டிலும் ஊக்கமும், தைரியமும், பழுத்த அனு பவமும் வாய்ந்த சிலரிலே இவர் முக் கியமானவர். தாம் ஏற்றுக்கொள்ளும் பணியைக் குறைவேது மில்லாமல் ஆற்றும் பண்பினர். தெய்வ பக்தி வாய்ந்தவர். அண்மையிலே கல்வி யமைச்சராகப் பதவி யேற்றுச் சென்னை மாநிலமெங்குஞ் சுற்றி, ஆசிரியர்கள் பலரைக் கலந்து கல்வி வளர்ச்சிக்காக யாது செய்வதென ஆராய்ந்தார். இவர் ஆசிரியர்களுக்கு உற்ற நண்பர். ஆசிரியர் யாவரும் தமது குறைகளை இவரிடம் எடுத்துக் கூறலாம்; பொறுமையாக நெடுநேரம் நாம் கூறுவதைச் செவியேற்பார். கல்வி சம்பந்தமான கூட்டங்ச்ளில் முழு மனத்துடன் கலந்துகொள்வார். கடந்த 20 ஆண்டுகளாக ஒவ்வொரு துறையிலும் அநுபவம் வாய்ந்த இவர், முதல் அமைச்சராகத் தொண் டாற்றுவது நம் நாட்டின் பாக்கியமே யாகும். கல்வி பற்றிய சீர்திருத்தங் களிலும் திட்டங்களிலும் நம் சென்னை மாநிலமே முன் நிற்கின்றது. மதிய உணவு திட்டம், இலவசக் கல்வி, இவை போன்றவை வெற்றியுடன் நடந்து வருகின்றன. வரும் ஆண்டு முதல் S. S. L. C. வகுப்பு முடிய இலவசக் கல்வி அளிப்பதாக இவர் வெளியிட்டுள்ளார்; இந்த அறிவிப்பு யாவர்க்கும் பெரு மகிழ்ச்சியை யளித் துள்ளது. கல்வியின் முன்னேற்றத் திற்காக அவசியம் செய்யவேண்டு மென சிலவற்றை ஈண்டுக் கூறுகின் றோம். அமெரிக்கா, ரஷ்ஷியா, இங்கி லாந்து முதலிய முற்போக்கு நாடு களில் கல்வியின் தரத்தை உயர்த்தப் பெருமுயற்சி செய்து வருகின்றனர். விஞ்ஞான வளர்ச்சியால் இயங்கும் சமூகத்தில் விஞ்ஞானமும், இதற்கு அடிப்படையான கணிதமும் முக்கிய மான இடம் பெறவேண்டும். விஞ்ஞா னம், கணிதம் இவற்றைக் கற்பிக்கும் முறைகளை நன்கு ஆராய்ந்து, கற் போர் விஷயங்களைத் தாமே ஆராய்ந்து கற்க, வேண்டிய வசதிகள் வேண்டும். பள்ளிகளிலே ஆராய்ச் சிச் சாலைகள் வேண்டும்; ஆசிரியர் களும் கற்பவர்களும் நாட்டில் பல இடங்களுக்குச் சென்று அனுபவம்

பெற, வாய்ப்பு அளிக்கவேண்டும். இரண்டாவதாக, கல்வி இலவசம் என்று உணரும் பெற்றோர்களும் சிறுவர் சிறுமியரும் பாடங்களை அறக் கற்பது அவசியமில்லை என்ற மனப் பான்மை கொள்வரெனச் சிலர் அஞ்சுகின்றனர். கற்பவர்கள் ஊக்கங் கொண்டால்தான் ஆசிரியர் ஊக்கமுடன் கற்பிப்பர். பள்ளிகளில் கற்பிப்பவர், கற்பவர் இவர்களது ஊக்கம் ஓங்குவதற்கான வழிகளை நாம் அவசியம் ஆராயவேண்டும். நம் மாநிலத்தில் பதினோராவது வகுப்பில் உள்ள மாணவரகளது தரம், மற்றை மாநிலங்களுள் சிலவற்றிலுள்ள தரத்தைவிடக் குறைவு என்று சிலர் மனம் புழுங்குகின்றனர். பாடத்திட்டத்தைத் திருத்தி அமைக்கும்போது, அவசியமில்லாதவற்றைக் களைந்தெறிந்து, முதல் வகுப்பு முதல் கற்பிக்கும் விஷயங்களின் தரத்தை உடனடியாக உயர்த்துவது சால நன்றாகும். இலவசக் கல்வியை அமலுக்குக் கொண்டுவரும்போது அரசியலார் அவசியமாக ஒன்றை ஆராயவேண்டும், இம்மாநிலத்தில் அரசியலாரது உதவிபெற்று இயங்கி வரும் பள்ளிகள் பல உள்ளன. இலவசக் கல்வி அமலுக்கு வந்தால் இப் பள்ளிகளின் பொருளாதார நிலை பெரிதும் பாதிக்கப்பெறும். இப்பள்ளிகள் கல்வியின் தரம் குறையாது கல்வி கற்பிக்க முயன்றுவருகின்றன ; இவற்றின் பொருள் நிலை சிறிதேனுங் குன்றுமல் அரசியலார் ஆவன செய்வாரெனின், இப்பள்ளிகள் எப்போதும் போல் இயங்கிச் சமுகத்தின் நலன்களைப் பெருக்கப்பயன்படும். இவை போல்வன பலவற்றை முதல் அமைச்சர் ஆராய்ந்து, சமூகத்தின் உயிர் நாடியாகவுள்ள கல்வியைப் பெருக்குவாரென்பது திண்ணம்.

ஆசிரியர் நிலையை உயர்த்துதல்

P. N. கிருபால்

[செப்டம்பர் 5-ஆம் தேதி ஆசிரியர் நாளாகப்பாரததேசமுழுதும்கொண்டாடப்படும். இக் கட்டுரையில், இந்திய அரசாங்கத்தின் கல்வித் துறையில் 'அட்வைஸர்'—ஆகப் பணியாற்றி வரும் ஸ்ரீமான் P. N. கிருபால் என்னும் அறிஞர் நம் நாட்டின் விடுதலைக்குப் பின்னர் ஆசிரியர்களின் நிலையை உயர்த்துதற்கு மத்தியஅரசாங்கமும் பல இராச்சியங்களும் செய்துவரும் பல்வேறு முயற்சிகளைச் சுருக்கமாகக் கூறுகின்றார். "இந்நாட்டில் எக்காலத்தும் ஆசிரியருக்கு மிக்க மதிப்பு உண்டு. நம்தேசத்தில் முற்காலத்தில் குருவினைச் ,சாதாரண ஆசிரியராக-மட்டுமன்றி, நண்பராகவும். வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும், அறவுரைகளை உபதேசிக்கும் வேதாந்தியாகவும், மன்னனும் மக்களும் மதித்து வந்தனர். உயர்ந்த அப் பழம்பரம்பரைப் பழக்கத்திற்கு ஏற்ப, நம் நாட்டில் உள்ள முதல்தர ஆசிரியர்கள் இருவரை மிக்க மதிப்புக்குரிய ராஷ்டிரபதி, உபராஷ்டிரபதி என்னும் உய

நிலைக்குத் தேர்ந்தெடுத்திருக்கின்றோம்" என்பர் இக் கட்டுரையாசிரியர்.]

நாம் சுதந்திரம் அடைந்த நாள் முதல், நாட்டின் சமூகப்பொருளாதார முன்னேற்றத்தின் முக்கியப்பகுதியாக விரிந்த கல்விச் சீர்திருத்தத் திட்டத்தை வகுத்துள்ளோம். நம் முயற்சியில் நாம் அடையும் வெற்றி பெரும்பாலும் ஆசிரியரின் உயர்தரத்தினை—அவருடைய கல்வியறிவையும், போதனுமுறைப் பயிற்சியையும் குணவொழுக்கங்களையும்—பொறுத்தது என்பது வெளிப்படை. நாம் போற்றிப் பாதுகாத்துவரும் பரம்பரைப்பழக்கங்களுக்கு ஏற்ப, ஆசிரியர் தமக்குத் தெரிந்தவற்றையெல்லாம் மாணுக்கருக்குக் கற்பித்து, அவர்களை உயர்த்தும் பணியில் தம்மை அர்ப்பணம் செய்துகொள்ளும் முறையில் தம் கடமையைச் செய்தல் வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கின்ரேம். அதே சமயத்தில், நம் கடமையையும் நாம் மறந்துவிடக்கூடாது. ஆசிரியர், தம் பணியை ஆற்றுங்காலத்தும் முதுமையால் ஓய்வு பெற்ற காலத்தும், வறுமையால் வாடாமல் இருத்தற்கு வேண்டிய பொருளுதவியைச் செய்தலும், அவர் சமூகத்திற்குச் செய்யும் முக்கியமான பணிக்குத் தக்க மதிப்பினை அளித்தற்குரிய உபாயங்களை ஆராய்ந்து கண்டுபிடித்தலும் சமூகத்தின் தலைசிறந்த பொறுப்பு என்பதனை நாம் மறத்தல் ஆகாது.

நம் நாடு சுதந்திரம் அடைந்த பின்னர், இத்துணையாண்டுகளாக மத்திய அரசாங்கமும் பிற இராச்சியங்களும் ஆசிரியர்களின் நிலையை உயர்த்தப் பல முறைகளில் முயற்சி செய்து வருகின்றன. பிற துறைகளுக்கு அளிக்கப்படும் பொருளுதவியைவிடக் கல்வித்துறைக்கு அளிக்கப்படுவது மிகக் குறைவானது. ஆயின், கல்விக்குரிய வாய்ப்புக்களை விரிவுபடுத்தல் வேண்டும் என்று மக்கள் தொடர்ந்து வற்புறுத்திக் கேட்டுக்கொண்டே வருகின்றனர். நாம் இவ்விரண்டினையும் உள்ளத்தில் கொண்டு ஆராயின், இப்பொழுது அடைந்திருக்கும் முன்னேற்றம் கூடியவரை திருப்தியைத் தருவதாகும் என்றே எண்ணுகின்ரேம். ஆயின், இன்னும் செய்ய வேண்டுவது மிக அதிகமாக இருக்கின்றது என்பதனையும் ஒப்புக்கொள்கின்ரேம்.

தொடக்கப்பள்ளி யாசிரியர்

முன்பு தொடக்கப்பள்ளி யாசிரியர் மதிக்கப்படாமல் அசட்டைசெய்யப்பட்ட நிலை வருந்தத்தக்கதேயாகும். அவருடைய கல்வித்திறமை குறைவுபட்டதே; போதனுமுறைப் பயிற்சியும் போதுமானதன்று. அவர் குறைந்த சம்பளத்தில் பணியாற்ற வேண்டியிருந்தது. தம் குடும்பத்தை விட்டு நெடுந்தூரத்திலுள்ள இடங்களில் அமைந்த பள்ளிகளில் தம் தொண்டினைச் செய்துவந்தார். வாழ்க்கைக்கு இன்றியமையாத சௌகரியங்கள் ஆங்கு இல்லை. அவருடைய கருத்துக்களையும் அறிவினையும் வளம்படுத்த எவ்வகை முயற்சியும் செய்யப்படவில்லை. தொழில்துறையில் அவருடைய திறமையை வளர்த்தற்கு வேண்டிய உதவியும் அளிக்கப்படவில்லை. வேலையிலிருந்து விலகி ஓய்வெடுத்துக்கொள்ளும் முதுமைப் பருவத்தில் அவருடைய வாழ்க்கை உற்சாகமின்றி யிருந்தது. ஆதலின், தொடக்கப்பள்ளிகளில் கற்பிக்கும்

பணி துன்பத்தையும் ஏமற்றத்தையும் கொண்ட அநுபவமாய் இருந்தது என்பதில் வியப்பொன்றுமில்லை !

நடுத்தர, உயர்தரப் பள்ளி யாசிரியர்

நடுத்தர, உயர்தரப் பள்ளிகளில் உள்ள நிலைமைகள் தொடக்கப்பள்ளிகளைவிடச் சிறிது சிறந்தனவாக இருந்தன. ஆயின், இங்கும் ஆசிரியர்கள் பலவேறு குறைகளுடன் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார்கள் 'ஸெகண்டரி' பள்ளிகளுள் பெரும்பாலனவை தனி-யார்சங்கங்களால் நடத்தப்பெற்று வந்தன. உத்தியோகநிபந்தனைகள் அப் பள்ளிகளில் அவ்வளவு திருப்தியாக இல்லை. அவர்களின் ஓய்வுக் காலத்தில் எந்தவித நன்மையும் செய்யப்படவில்லை. ஆசிரியர்கள் தாங்கள் பெறுஞ் சம்பளத்தைக்கொண்டு வாழ்க்கையை நடத்த முடியவில்லையாதலின், மாணுக்கரின் வீட்டுக்குச் சென்று அவர்களுக்குப் பாடங்களைக் கற்பித்துப் பொருளுதவி பெற்று, தம் குறையை நிறைவாக்கிக்கொண்டனர் ஆயின், இதனுல் அவர்களிடத்தில் பொது மக்களுக்கிருந்த மதிப்புக் குறைந்துவிட்டது. இவர்கள் அறிவை வளம்படுத்தி விரிவாக்கவும், கல்வியறிவிலும் பயிற்சியிலும் ஏற்பட்டுள்ள பல முன்னேற்றங்களுக்குத் தக்கவாறு இவர்களை முன்னணியில் நிறுத்தவும் வேண்டிய முயற்சி யாதொன்றும் செய்யப்படவில்லை.

ஆரம்பப்பள்ளியாசிரியர்களின் ஊதியம்

முதற்கண் ஆசிரியர்கள் பெற்றுவரும் ஊதியத்தைப்பற்றி ஆராய்வோம். பத்தொன்பதாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் பழைய தேசிய முறையில் பணியாற்றி வந்த தொடக்கப் பள்ளியாசிரியர்கள் ஆண்டுக்கு ரூபாய் அறுபது பெறுமானமுள்ள வருவாயைப் பெற்று வந்தனர். (அவ்வருவாயில் சிறிது பகுதி தானியம் முதலிய பொருள்களாகவும் இருந்துவந்தது). 1882–இல், தொடக்கப்பள்ளியாசிரியரின் ஆண்டுச்சராசரி வருமானம் ஏறக்குறைய ரூ. 89-என்று 'ஹண்டர் கமிஷன்' வெளியிட்டுள்டுள்ளது. அந்நூற்ருண்டின் இறுதியில், அத்தொகை ஏறத்தாழ ரூபாய் 91 அளவுதான் உயர்ந்தது, 1931–32 இல், ரூ.174 ஆகவும், 1946-47-இல், ரூ. 387 ஆகவும் அவ்வருமானம் உயர்ந்துள்ளது. நாடு சுதந்திரம் பெற்றபின் அவர்களின் ஊதியம் உயர்த்திக்கொண்டே வரப்பட்டது. இப்பொழுது தொடக்கப்பள்ளியாசிரியர் ஒருவரின் ஆண்டுச் சராசரிச் சம்பளம் ரூ. 900. நாட்டின் முன்னேற்றத்திற்கு என்று வகுக்கப்பட்ட மூன்று ஐந்தாண்டுத்திட்டங்களிலும், ஆசிரியர் ஊதியத்தை உயர்த்துதற்கு வேண்டிய பொருளை அளித்தற்கு வழித்துறைகள் வகுக்கப்பட்டன. இந்நாட்டிலுள்ள இராச்சியங்களெல்லாம் ஆசிரியருக்கு அதிக சம்பளத்தை அளிப்பதற்கு இத் திட்டம் உதவியுள்ளது. இதற்கு உரிய உதாரணங்கள் சில வருமாறு : மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேர்ச்சியுற்றுப் போதனுமுறைப் பயிற்சியையும் பெற்ற ஆசிரியர் ஒருவர், ஒரிஸ்ஸா இராச்சியத்தில் பெற்றுவரும் அடிப்படைச் சம்பளத் திட்டம் ரூ. 100-150; ஆந்திரா, மைசூர், மேற்கு வங்காளம் ஆகிய இராச்சியங்களில் ரூ. 80-150; மத்திய பிரதேசத்தில் ரூ. 90–170; சென்னையில், ரூ.90-140; இராஜஸ்தானில் ரூ. 75-160; ஜம்மு காஷ்மீரில், ரூ. 70-160.

நடுத்தர, உயர்தரப் பள்ளியாசிரியரின் சம்பளத் திட்டத்தில் முன்னேற்றம்

நடுத்தர, உயர்தரப்பள்ளி யாசிரியர்களின் சம்பளத்திட்டத்திலும் இத்தகைய முன்னேற்றத்தைக் காண்கின்ருேம். நடுத்தரப்பள்ளியாசிரியர் ஒருவரின் ஆண்டுச் சராசரிச் சம்பளம், 1921-22இல் ரூ. 393. அத்தொகை 1946-47இல் ரூ571 ஆகவும்,1960-61 இல் ஏறத்தாழ ரூ.1400ஆகவும் மிகுதியாக்கப்பட்டது. இது போன்றே, 1960இல் ' ஸெகண்டரிப்பள்ளியாசிரியர் ஒருவரின் ஆண்டுச் சராசரிச்சம்பளம் ஏறத்தாழ ரூ.1680 ஆகும். சமீப காலத்தில் இவர்களின் சம்பளத் திட்டங்களும் மிக உயர்த்தப்பட்டுள்ளன. இன்று ஆந்திரப் பிரதேசத்தில், பி.ஏ, பட்டம் பெற்றுப் போதன முறைப் பயிற்சியும் பெற்ற ஆசிரியருக்கு அமைந்துள்ள அடிப்படைச் சம்பளத் திட்டம் ரூ. 130-250 ; அஸ்ஸாமில், ரூ. 150-300 ; மத்தியப் பிரதேசத்தில் ரூ. 150-290 ; சென்னையில் 140-250; மேற்கு வங்காளத்தில் ரூ. 160-295.

சில இராச்சியங்களில், இச் சம்பளத் திட்டம், இக் காலத்தும், சிறிது குறைந்து காணப்படுகின்றது என்பது உண்மை. ஆயின், காலப்போக்கில் அந்நிலை மாறும் என்பது தெளிவு. இராச்சிய அரசாங்கங்கள் ஆசிரியரின் ஊதியத்தை உயர்த்துதற்குப் போதிய கவலையும் அக்கறையும் கொண்டுள்ளன. ஆயின், அவைகளின் ஆர்வத்துக்குத் தடையாயிருப்பது போதிய பொருட் செல்வம் இல்லாமையேயாகும். மிக்க உற்சாகத்தைத் தருகின்ற மற்ருெரு மாறுபாட்டினையும் காண்கின்ருேம். ஒரே கல்வித் தகுதியைப் பெற்று ஒரே விதமான பணியைச் செய்யும் ஆசிரியர்கள், பல வேறு வகைப்பட்ட ஸ்தாபனங்களின்கீழ் உள்ள பள்ளிகளில் தொண்டாற்றிவரினும், அவர்களனை வருக்கும் மாறுபாடில்லாத ஒரேவித விதமான சம்பளத் திட்டத்தை அமைத்தல் வேண்டும் என்று இராச்சியங்களெல்லாம் முயற்சிசெய்து வருகின்றன. பல இராச்சியங்கள் இத் திட்டத்தை வகுத்து விட்டன. பிற இராச்சியங்களும் இம் முயையைப் பின்பற்றும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. அதனல் தனியார்த் துறையில் உள்ள பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் நெடுங்கால மனக்குறை நீங்கும்.

சென்னைத் திட்டம்

ஆசிரியர் தொழிலுக்கு இன்னும் மிக்க தகுதியுடையோர் வரவேண்டுமாயின், நாம் அவர்கள் மனத்தைக் கவரும் முறையில் கண்ணியமான ஊதியத்தை அளித்தல் வேண்டும் என்பது மிக இன்றியமையாதது என்பதனை முன்னரே அறிவித்துள்ளேன். ஆசிரியர்கள் முதுமைகாரணமாகப் பணியாற்றத் தகுதியற்று ஓய்வு பெறுங் காலத்திலும், சமூகம் அவர்களைக் கைவிடாமல் வேண்டுவன செய்து உதவும் என்னும் உறுதியான எண்ணத்தை அவர்கள்மனத்தில் பதியவைக்க வேண்டுவது மிக மிக அவசியம். நம் நாடு உரிமை பெறுதற்கு முன்னர், அரசியல்பள்ளிகளில் பணியாற்றி ஓய்வெடுத்துக் கொண்டவர்களே ஒழுங்காகப் ' பெண்ஷன்' தொகையைப் பெறும் உரிமையைப் பெற்றுவந்தனர். மற்றையவர்க்கோ அவ்வித உதவி சிறிதும் செய்யப்படவில்லை. ஆயின், ' பிராவிடென்ட் பண்டு' என்னும் ஒரு

முறையைமட்டும் மேற்கொண்டிருந் தனர். ஆயின், பொருளுதவி அவர் களுக்கு முதுமைப்பருவத்தில் இன்றி யமையாது வேண்டுவனவற்றைப் பெறுதற்கும் முற்றிலும் போதாது.

சென்னை இராச்சியம் மூவகை உத வித்திட்டம் (Triple Benefit Seheme) என்னும் ஒரு புதுமுறையை வகுத்து, மற்றை இராச்சியங்களுக்கு வழிகாட்டி யாய் விளங்குகின்றது. அத்திட்டப் படி ஓய்வெடுத்துக்கொள்ளும் முதிய ஆசிரியர்கள் 'பென்ஷன்' 'பிராவி டென்ட் பண்டு', 'இன்ஷ்யூரன்ஸ்' என்னும் மூவகையுதவிகளைப் பெறு வர். இவ்வரசாங்கத்தைப் பின்பற்றி ஆந்திரப்பிரதேசம், மைசூர், கேரளம் என்னும் மூன்று இராச்சியங்களும் இத் திட்டத்தை ஆட்சிக்குக் கொண்டு வந்துள்ளன. பீஹார் இராச்சியம் இம்முறையைப்பின்பற்ற அண்மை யில் தீர்மானித்துளது. மஹாராஷ்டிர இராச்சியம் தொடக்கப்பள்ளியாசிரியர் அளவில் இம் முறையை மேற் கொண்டு தொடங்கியிருக்கின்றது. மற்றைய இராச்சியங்களிலும், நான் காம் ஐந்தாண்டுத்திட்டத்தின் முடி வில் இந்தியாவிலுள்ள எல்லா இராச் சியங்களிலும் இத் திட்டம் மேற் கொள்ளப்படும் என்பது உறுதியான நம்பிக்கை.

ஆசிரியரின் மக்களுக்கு அளிக்கும் உதவி

ஆசிரியர்களின் குழந்தைகளுக்குத் தாராளமாக உதவிச்சம்பளச்சலுகை கள் காட்டப்படுஞ் செய்தியையும் ஈண்டு நினைவூட்டவிரும்புகின்றேன். சென்னையிலும் மேற்குவங்காளத்தி லும், தொடக்கப்பள்ளிகள் ஸெகண் டரிப்பள்ளிகள் இவற்றில் பணியாற்றி வரும் ஆசிரியர்களின் மக்கள் உயர் தரஸெகண்டரிக்கல்வி நிலைவரை இச் சலுகையைப் பெறுகின்றனர். ஆந் திரப்பிரதேசம், அஸ்ஸாம், பீஹார், கேரளம், பஞ்சாப், உத்தரப்பிரதேசம் என்னும் இராச்சியங்களில் உள்ள ஆசிரியர்களின் குழந்தைகள் சில சிறப்புப்பொருளுதவிச்சலுகைகளையும் பெறுகின்றார்கள். மைசூர், மகாராஷ் டிரம், குஜராத், மத்தியப்பிரதேசம் என் னும் இராச்சியங்களில் உள்ள ஆசிரி யர்களின் குழந்தைகள், குறைத்த வருவாயுள்ள குடும்பங்களிலிருந்து வரும் எல்லாக்குழந்தைகளும் பெறு வதைப்போல, தாராள உதவிச்சம் பளச்சலுகையைப் பெற்றுவருகின்ற னர். தொடக்கப்பள்ளிகளிலும் ஸெகண்டரிப் பள்ளிகளிலும் பணி யாற்றும் ஆசிரியர்களின் புத்திரர்கள் புத்திரிகள் இவர்களுள் மிகப் பாராட் டத்தக்க முறையில் பள்ளியிறுதிப் பரீட்சையில் தேர்வுபெற்றிருந்தால், அவர்கள் கல்லூரிகளில் படித்தற் கென, இந்திய அரசாங்கம் ஆண்டு தோறும் அத்தகைய ஐந்நூறு மக்க ளுக்குச் சிறப்புமுறையில் உபகாரச் சம்பளம் வழங்கிவருகின்றது.

இந் நாட்டில், எக்காலத்தும் ஆசிரி யருக்கு மிக்க மதிப்புண்டு. நம் தேசத் தில் முற்காலத்தில் குருவினைச் சாதா ரண ஆசிரியராகமட்டுமின்றி, நண்ப ராகவும், வாழ்க்கைக்கு வழிகாட்டியாக வும், அறவுரைகளை உபதேசிக்கும் வேதாந்தியாகவும், மன்னனும் மக்க ளும் மதித்துவந்தனர். அவ்வுயர்ந்த பழம்பரம்பரைப் பழக்கத்திற்கேற்ப, நம்நாட்டில் உள்ள முதல்தர ஆசிரியர் களிருவரை மிக்க மதிப்புக்குரிய இராஷ்டிரபதி, உபராஷ்டிரபதி என் னும் உயர்நிலைக்குத் தேர்தெடுத்

திருக்கின்றோம். நாட்டுமக்களனைவரும் கல்விகற்றல்வேண்டும் என்னும், கொள்கையோடு, பொருட்செல்வத்திற்கே மதிப்பினை அளிக்கும் இந்நாளில், அந்நாளில் இருந்து வந்த பழைய குருகுலக்கல்வி முறையை மீண்டும் மேற்கொள்ளவேண்டும் என்று கருதுவது பயனுடையதாகாது ஆயின், ஆரவாரமின்றிப் பணிசெய்து கிடப்பதே தம் கடன் என்று அருந்தொண்டு பல ஆற்றிவரும் நம்நாட்டு ஆசிரியர்களுள் மிக்க அறிவும் ஆற்றலும் புகழும் பெற்றவர்களுக்கு மதிப்பும் பாராட்டும் அளித்து நமது நன்றியறிவினை வெளிப்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர்களுக்கு அளிக்கும் பட்டமும் பரிசிலும்

இந்திய அரசியலார் இப்பணியைச் சில ஆண்டுகளாகச் செய்துவருகின்றனர். ஒவ்வோர்ஆண்டும், இந் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள தொடக்கப்பள்ளியாசிரியர்கள், உயர்நிலைப்பள்ளியாசிரியர்கள் இவர்களுள் எண்பத்தைம்பதின்மர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவர்கள் டெல்லி நகருக்குச் சென்று, தம் தொழிலுக்குப் பொதுமக்கள் காட்டும் நன்றியறிவுக்கு அறிகுறியாக, இராஷ்டிரபதியிடமிருந்து தகுதிப் பத்திரமொன்றும் ஐந்நூறு ரூபாய் ரொக்கமும் பெறுகின்றனர். ஆசிரியர்கள் தங்கள் அனுபவத்தை ஒருவர்க்கொருவர் கூறி நன்மை பெறுதற்கும், இது நல்ல வாய்ப்பாக உளது. அவர்கள், புதியமனவுறுதியோடும், தங்கள் பணியில் புத்துணர்ச்சியோடும், மிக்க நம்பிக்கையோடும் தம் தம் ஊருக்குத் திரும்பிச் செல்கின்றனர். தாம் செய்துவரும் அரும்பெருந் தொண்டினுக்கு நாடு பேராதரவு அளிக்கின்றது என்னும் திருப்தியும் அவர்களுக்கு உண்டாகின்றது. இராச்சிய அரசாங்கங்கள் இந்திய அரசாங்கத்தின் இம்முறையைப் பின்பற்றிச் சில திட்டங்களையும் வகுத்துள்ளன.

தேசிய ஸ்தாபனம்

சென்ற ஆண்டு, ஆசிரியர்களின் நலத்தைக் கருதிப் புதியதொரு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. வறுமை நிலையிலுள்ள ஆசிரியர்களுக்கும் அவர்கள் குடும்பங்களுக்கும் பொருளுதவி செய்தற்பொருட்டு, ஆசிரியர் நலத்திற்குரிய தேசிய ஸ்தாபனம் நிறுவப்பட்டுள்ளது. முதலாண்டிலேயே பொதுமக்கள் அந் நிதிக்குத் தாராளமாகப் பொருள் அளித்துள்ளனர். முப்பத்தைந்து லட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டு, தேசியத் தற்காப்புப் பத்திரங்களில் போடப்பட்டுள்ளது. ஐந்து கோடி ரூபாய் சேர்ந்தல் வேண்டும் என்பது அதன் குறிக்கோள். அதன் வட்டியைக் கொண்டு இந்த ஸ்தாபனத்தின் கொள்கைகளை நிறைவேற்றக் கருதியுள்ளனர்.

ஆசிரியர் நாளின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடும் இந் நாளில், நாம் ஆசிரியர்களுக்குச் செய்யவேண்டிய கடமையை மீண்டும் நினைவுறுத்திக்கொள்வோம். ஆசிரியர்களின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்தியும், நம் நாட்டுக் குழந்தைகளின் முழு வளர்ச்சிக்கு வேண்டிய எல்லாத் தொண்டுகளையும் அவர்கள் செவ்வனே செய்தற்கு வேண்டிய சூழ்நிலைகளை அமைத்துக் கொடுத்தும், நாம் செய்யவேண்டிய கைம்மாற்றினைச் செய்ய உறுதிகொள்வோம். இவ்வுறுதியை யொட்டி, ஆசிரியர் நன்மைக்காகத் திரட்டும் க்ஷேமநிதிக்கு அனைவரும் தாராளமாகப் பொருளுதவி செய்தல்வேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றேன்.



அண்மையில் அரசாங்க விருது பெற்ற
உதவி ஆரம்ப ஆசிரியர்
ஸ்ரீ K. C. பத்மநாபன்

அண்மையில் அரசாங்கத்தாரிட மிருந்து விருதுபெற்ற ஆரம்பப்பள்ளி ஆசிரியர் ஸ்ரீமான் K. C. பத்மநாபன் அவர்களைச் சென்னை நகரிலுள்ள ஆரம்ப ஆ சி ரி ய ர் ஒவ்வொருவரும் நன்கு அறிவர். ஷ்ரீ K.C. பத்மநாபன் அவர்கள் சிறு வயதிலேயே ஸெகண்டரி கிரேடு ஆசிரியர் பயிற்சி பெற்றுக் கடந்த இருபத்துமூன்று ஆண்டுகளாகத் தொடர்ச்சியாகக் கல்வித் துறையில் சேவை புரிந்து வருகிருர். சமூக சேவையின் முன்னணியில் நிற்கும் ஸ்ரீராமகிருஷ்ணமடம் ஆதரவில் இயங்கிவரும் ஸ்ரீ ர ா ம கி ரு ஷ் ண ஸெ ன் டி ன ரி ஆரம்பப்பள்ளியின் உதவி ஆசிரியராக இருக்கும் ஸ்ரீ பத்மநாபன் தன் கவனத்திற்கு விடப்பட்டிருக்கும் குழந்தைகளுக்குச் சிறந்த முறையில் கல்வியும் ஒழுக்கமும் கற்பிப்பதோடு தம்முடன் உழைக்கும் இதர ஆசிரியர்களையும் அன்புடனும் பரிவுடனும் நடத்தி அவர்கள் உள்ளத்தில் அழியாத இடம் ஒன்று பெற்றுள்ளார்.

பல ஆண்டுகள் ஆரம்ப ஆசிரியர்கள் சங்கத்தின் செயலராகப் பணியாற்றி ஆசிரியர்களின் நலனுக்குச் சிறந்த சேவை செய்துள்ள ஸ்ரீ பத்மநாபன் அவர்கள் மயிலை வட்டத்தில் நடைபெற்ற மதிய உணவுத்துவக்க விழா, ஆடை வழங்கு விழா இவைகளில் பெரும் பங்குகொண்டு சமூகத்தினர், அரசியலார் முதலியவர்களுடைய நன்மதிப்பையும் பெற்றுள்ளார்.

இவருடைய தன்னலமற்ற சேவையையும் கலைக்கோவிலுக்குச் செய்துள்ள சாதனைகளும் அரசாங்கம் உணர்ந்து, இருநூறு ரூபாய் மதிப்புள்ள பரிசுப்பத்திரம், ஓர் நற்சான்றிதழ், ஒரு வெள்ளி மெடல் ஆகியவை கொண்டு விருது ஒன்றை அவருக்கு வழங்கி, அன்னாரைக் கவுரவப்படுத்தியது. இச்சம்பவம் ஆரம்ப ஆசிரியர்கள் குழுவிற்கே ஒரு சிறந்த கவுரவம் ஆகும். ஸ்ரீ பத்மநாபனைப் பாராட்டி, அவர் மேன்மேலும் இப்பணியில் ஈடுபடக் கடவுள் அவருக்குத் தேக திடத்தையும் நீண்ட ஆயுளையும் கொடுக்கவேண்டுமாய்க் கடவுளைப் பிரார்த்திக்கின்ருேம்.

ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரையில் தமிழ் இலக்கணம் போதித்தல்

எழுத்தும் சொல்லும்

(By Sri C. Ekambara Iyer, Tamil Pandit, P.S. High School)

முதல் வகுப்பில் சிறுவர்கள் படங்களின் மூலமாகவே பொருள்களின் பெயர்களைச் சொல்லுவதிலும், சொன்ன பொருள்களைப் பற்றிச் சில வார்த்தைகள் பேசுவதிலும் பழகியிருப்பார்கள். ஆண்டின் இறுதிக்குள் எழுத்துக்களைத் தனித்தனி எழுதவும், ஒன்றும் பலவுமான எழுத்துக்களைக் கொண்ட சொற்களை உண்டாக்கி எழுதிப் படிக்கவும், மிக எளிய சிறு வாக்கியங்களைச் சிருட்டித்து எழுதவும் படிக்கவும் திறம் பெற்றுமிருப்பார்கள். வடமொழி எழுத்துக்களின் பயிற்சியும் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும். எழுத்துக்களில் உயிர், மெய், உயிர்மெய் இவை இவை என்று அவர்களுக்குச் சொல்ல வேண்டுவது இல்லை. அவற்றைப் பற்றி மேல் வரும் வகுப்புக்களில் அவர்கள் அறிவார்கள். அவர்களோடு நாம் பேச்சுக் கொடுப்பதன் மூலம் அவர்களை நன்கு பேசுமாறு பழக்கலாம்.

இரண்டாவது வகுப்பில் உயிர், மெய் எழுத்துக்களின் போதனை தொடக்கம் பெறலாம். உயிர்கள் 12ம், மெய்கள் 18ம் இவை இவை எனறு சுட்டிக்காட்டலாம். பின்னர் அகரம் தொடங்கிய 12 உயிர்களையும் முதலாகக் கொண்ட சிறு சொற்களை எழுதச் சொல்லி, உயிர்கள் மொழிக்கு முதலில் தனித்து வருவதைச் சிந்தையில் புகும்படி செய்யலாம். மெய் எழுத்துக்களில் எவை எவை மொழிக்குக் கடைசியில் வருகின்றன என்பதை அவர்களைக்கொண்டே சொற்களை உதாரணமாக எழுதச் சொல்லி, அறிவில் புகும்படி செய்யலாம். சிறு சொற்களால் ஆன வாக்கியங்கள், கதைகள், பாட்டுக்கள் அமைந்த பாடங்கள் இவ்வகுப்புப்பிள்ளைகட்குப் பொருந்துவனவாம்.

மூன்ருவது வகுப்பில் சிறுவர்களுக்கு உயிர் எழுத்துக்கள் மொழிக்கு ஈற்றில் தனித்து வாரா, மெய் எழுத்துக்களும் மொழிக்கு முதலில் தனித்து வாரா என்பதை விளக்கிக்கூறுதல் அவசியம். உயிர் மெய் எழுத்துக்களைப்பற்றிய விவரம் இந்த வகுப்பில் அறிதற்கு உரியது. ஓர் மெய்யும் ஓர் உயிரும் கூடிப்பிறப்பதே உயிர் மெய் எழுத்தாகும் என்பதை அறிவிக்க வேண்டும். முதலாம் மெய்யான ககரத்தோடு பன்னிரண்டு உயிர்களையும் தனித்தனிச் சேர்க்கச் சொல்லி அதனுல் பன்னிரண்டு உயிர் மெய்கள் உண்டாவதையும், அவ்வண்ணமே பதினெட்டு மெய்களோடும் பன்னிரண்டு உயிர்களும் தனித்தனி சேர்வதை ஆளுக்கு ஒரு மெய் வீதம் பிள்ளைகளுக்குத் தந்து உயிர்களைக் கூட்டிச் சொல்லச் செய்து $18 \times 12 = 216$ உயிர்மெய்கள் உண்டாவதையும் மெய்ப்பிக்கவேண்டும். சொற்களில் விட்டுப்போன எழுத்துக்களையும், வாக்கியங்களில் விட்டுப்போன சொற்களையும் பூர்த்தி செய்யச்சொல்லலாம்.

நான்காவது வகுப்பில் உயிர், மெய், உயிர் மெய் ஆகிய எழுத்துக்களின்

விரிவைப் போதிக்கலாம். எழுத்துக்களை உச்சரிப்பதனால் உண்டாகும் ஒலி வேறுபாடுகளை ஒட்டி அவை பாகுபாடு செய்யப்பட்டிருப்பதன் விவரத்தை அறியச் செய்யவேண்டும். குறுகிய ஒலி உடைய உயிர்கள் குறில், அவை அ, இ, உ, எ, ஒ என ஐந்து, நீண்ட ஒலி உடைய உயிர்கள் நெடில், அவை ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என ஏழு, அழுத்தி ஒலிக்கப்படும் மெய்கள் வல்லினம், அவை க், ச், ட், த், ப், ற் என ஆறு, மென்மையோடு ஒலிக்கப்படும் மெய்கள் மெல்லினம், அவை ங், ஞ், ண், ந், ம், ன் என ஆறு, அதிக அழுத்தமும், அதிக மென்மையும் இல்லாது நடுத்தரமாக ஒலிக்கப்படும் மெய்கள் இடையினம், அவை ய், ர், ல், வ், ழ், ள் என ஆறு என்பவை நன்கு விளக்கப்படவேண்டும்.

ஐந்தாவது வகுப்பில், உயிர்களில் சுட்டுப்பொருளை உணர்த்த வரும் அ, இ, உ இவை மூன்றும் சுட்டெழுத்துக்கள் என்றும், வினப்பொருளை உணர்த்த வரும் ஆ, எ, ஏ, ஓ, (யா) இவை ஐந்தும் வினவெழுத்துக்கள் என்றும் போதிக்கவும். மொழிக்கு முதலில் சுட்டெழுத்து மொழியினின்றும் பிரியாது நிற்பின் அகச் சுட்டு என்றும், பிரிந்து நிற்பின் புறச் சுட்டு என்றும் கூறப்படுதலையும், மொழிக்கு முதலில் வினவெழுத்து மொழியினின்றும் பிரியாது நிற்பின் அகவின என்றும், மொழிக்கு முதலிலும் ஈற்றிலும் அதனிடத்தினின்றும் பிரிந்து நிற்பின் புறவின என்றும் கூறப்படுதலையும் போதிக்கவும். உயிர்மெய் எழுத்துக்களில் குறில், நெடில், வல்லினம், மெல்லினம், இடையினம் இருப்பதை எடுத்துக் கூறல்வேண்டும். உயிர்க்குறில் ஐந்தும் பதினெட்டு மெய்களுடன் சேர்ந்தால் உயிர் மெய்க் குறில் $18 \times 5 = 90$ ஆவதையும், உயிர் நெடில் ஏழும் பதினெட்டு மெய்களுடன் சேர்ந்தால் உயிர் மெய் நெடில் $18 \times 7 = 126$ ஆவதையும் எடுத்துக் காட்டவும். அங்ஙனமே வல்லின மெய் ஆறும் உயிர்கள் பன்னிரண்டுடன் சேர்ந்தால் உயிர் மெய் வல்லெழுத்து $12 \times 6 = 72$ ஆவதையும், மெல்லினமெய் ஆறும் உயிர்கள் பன்னிரண்டுடன் சேர்ந்தால் உயிர்மெய் மெல்லெழுத்து $12 \times 6 = 72$ ஆவதையும், இடையின மெய் ஆறும் உயிர்கள் பன்னிரண்டுடன் சேர்ந்தால் உயிர்மெய் இடையெழுத்து $12 \times 6 = 72$ ஆவதையும் பிள்ளைகளின் உணர்வில் உறுத்தவும். ஒரு சொல்லில் வரும் உயிர், மெய், உயிர் மெய், குறில், நெடில் இவை இவை என்பதை அறிந்து சொல்லக் கூடிய பயிற்சிகள் தரலாம்.

ஃ என்னும்மூன்று புள்ளிவடிவுள்ள ஆய்த வெழுத்து இருப்பதையும் அது மொழிக்கு இடையில் மட்டுமே வரும் என்பதையும் உதாரணம் காட்டிப் போதிக்கவும். உயிர்மெய் எழுத்துக்கள் மொழியின் மூன்று இடங்களிலும் வரும், உயிர்கள் மொழிக்கு முதலில் தனித்தும், மொழி மூவிடங்களிலும் மெய்யொடு கூடியும் வரும், மெய்கள் மொழி இடையிலும் இறுதியிலும் தனித்தும், மூவிடங்களிலும் உயிரொடு கூடியும் வரும் என்பதைத் தெளிவாக்குக.

எழுத்தாலே சொல் உண்டாகிறது என்றும், ஒவ்வொரு சொல்லுக்கும் பொருள் உண்டு என்றும் சொல்ல வேண்டும். சொல்லானது ஓர் எழுத்தாலும் உண்டாகும், இரண்டு முத

லான பல எழுத்துக்களாலும் உண்டாகும் என்பதை உதாரண முகத்தால் தெளியச் செய்யவேண்டும்.

ஐந்து வகுப்புக்களிலும் பின் வரும் எழுத்துக்கள் இதுகாறும் போதிக்கப்பட்டவை, உயிர் (குறில், நெடில், சுட்டு, விஞ), மெய் (வலி, மெலி, இடை), உயிர் மெய் (குறில், நெடில், வலி, மெலி, இடை), ஆய்தம் ஆகும்.

முதல் எழுத்துக்கள், சார்பு எழுத்துக்கள் ஆகியவற்றின் விவரங்களைப் பிள்ளைகள் மேல் வகுப்புக்களில் தெரிந்து கொள்வார்கள்.

"பாலர் கல்வி"யின் அடுத்த சஞ்சிகையில் முதல் ஐந்து வகுப்புக்களுக்கு 'பெயர்ச் சொல்லும் வினைச் சொல்லும்' என்ற தலைப்பில் வரும் தொடர்ச்சியைக் காண்க.

திறனுறக் கற்பித்தல்

இந்த ஆண்டில் தென்னிந்தியக் கல்வி வாரத்தில் "திறனுறக் கற்பித்தல்" என்ற விஷயம் ஆராயப்பெறும். இதுபற்றிய சிறு குறிப்புக்கள் அடங்கிய சிறு புத்தகமொன்று தென்னிந்தியா ஆசிரியர் சங்கத்தினரால் விரைவில் வெளியிடப்பெறும். இக்குறிப்புக்களை ஆய்ந்து இம்மாநிலத்திலுள்ள பள்ளிகள் யாவற்றுள்ளும் கூட்டங்கள் கூடி கல்வியைத் திறனுற வழங்கும் வகைகளைப் பெரியோர் வெளியிடுவார்களென்று நம்புகின்றோம். இவ்வாறு கற்பிக்கும் தூய பணியில் ஊக்கங் கொள்ளவேண்டியவர்கள், அரசியலார், பெற்றோர், ஆசிரியர். அரசியலார் சரியான பாடதிட்டங்களையுங் கற்பிக்க வேண்டிய வகையினையும் வெளியிட்டுக் கல்வியின் தரத்தை ஓங்கச்செய்ய வேண்டும். கற்பிக்கும் முறைகள் ஒரே நிலையிலிருப்பன வல்ல ; அவ்வப்போது மாறிவரும். கற்பிப்பதில் ஆற்றல் வாய்ந்தவர்கள் கற்பிக்கும் முறைகளைப் பற்றிய ஆராய்ச்சிகள் நிகழ்த்துகின்றனர் ; தமது கருத்துக்களைப் பத்திரிகைகளின் மூலம் வெளியிட்டுவருகின்றனர். இவற்றை ஆசிரியர்கள் யாவரும் தெரிந்துகொள்ள வாய்ப்பு வேண்டும், இதற்காக அவ்வப்போது மாநாடுகள் மறுமலர்ச்சிக் கூட்டங்கள் முதலியன ஏற்பாடு செய்வது இன்றியமையாததாகும். அன்றியும் ஆசிரியர் நல்ல அனுபவமும், பரந்த மனப்பான்மையும் பெற நாடெங்குஞ் சென்று மக்களுடன் பழகி, தொழிற்சாலைகள், இயற்கை வனப்பு, கல்வி நிலையங்கள் முதலியவற்றை நேரில் கண்டு பயனுற வசதிகள் செய்துகொடுக்க வேண்டும்.

பெற்றோர்கள் செய்யவேண்டியது யாவர்க்குந் தெரிந்ததே. வீடுகளில் தமது குழந்தைகளுக்கு நல்ல பழக்கங்கள் பயிற்றுவிப்பதுடன் அடிக்கடி பள்ளிக்கு விஜயம் செய்து ஆசிரியர்களுடன் தொடர்புகொண்டு, குழந்தைகள் எவ்வாறு நல்ல முறையில் கல்வி பெற்றுத் தேறலாமென்பதை ஆய்ந்து அதன்படி செய்தல் வேண்டும். முற்போக்கு நாடுகளில் பள்ளிகளில் பெற்றோர்கள் ஊக்கங் காட்டி, ஆசிரியர்களுடன் கலந்து பழகித்

தமது குழந்தைகளது கல்வியின் தரத்தை உயர்த்துகின்றனர்.

கடைசியாக, ஆசிரியர்களைப் பற்றிச் சிறிது கூறவேண்டும். ஆசிரியர்கள் சமூகத்தின் ஆணிவேர். இவர்கள் கல்விகற்பிக்கவில்லை யெனில் சமூகத்திற்கு அடிப்படையே இராது. முற்காலத்திலே ஆசிரியர் சமூகத்தில் நல்ல நிலை பெற்றிருந்தனர். தாமும் நல்ல நெறியில் நின்று தமது மாணவர்களையும் நல்ல நெறியில் செலுத்தியதால், ஆசிரியர் தேவரெனக் கருதப்பெற்றனர். கல்வியைப் பற்றிச் செய்ய வேண்டுவனவெல்லாம் ஆசிரியர்களையே கலந்து செய்யவேண்டும்; சமூகத்தில் இவர்கள் முதலிடம் பெற வேண்டும். அடுத்தபடியாக இவர்களது ஊதியம் போதுமானதாக இருக்க வேண்டும். இவர்கள் தமது நிலைக்குக் கீழ்ச்சமூகத்தில் வேறெருருதுறையிலும் தாழ்வு இல்லை என்று மனம் நொந்து கொள்கின்றனர் இவர்களில் பலர். இவர்கள் செய்யும் பணியைக் குறைபடக் கூறுகின்றனர் ஒரு சிலர். நாள் ஒன்றுக்கு 5½ மணி வீதம் உழைத்து வருடம் 200 அல்லது 220 அல்லது 240 நாட்கள் வேலை செய்வதால், இவர்கள் சரியாக வேலை செய்வதில்லை என்பது சிலர் கருத்து. இவர்களுடைய பணி பள்ளிக்கூடத்தோடு நின்றுவிடுவதில்லை, மாணவர்களது நோட்டுப்புத்தகங்கள், பயிற்சிப் புத்தகங்கள், பரீட்சைத் தாள்கள் இவற்றைத் திருத்துவதுடன் பாடங்களைக் கற்பிக்கும் முறைகளையும் ஆய்ந்து குறிப்புகள் இவர்கள் எழுதவேண்டும். இவை நீங்கலாக, பல துறைகளிலும் மாணவர்களது ஆற்றலைத் தழைக்கச் செய்ய அவ்வப்போது கூட்டங்கள் விழாக்கள், போட்டிகள் இவை ஏற்பாடு செய்யவேண்டியிருக்கின்றது. இக்காலத்திய வகுப்பறையில் அளவு கடந்த மாணவர்கள் படித்துவருகின்றனர்; இவர்களது ஆற்றல், மனநிலை, சூழ்நிலை இவற்றுள் மாறுபாடு மலிந்திருப்பதால் இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஏற்பப் பாடங் கற்பிப்பதும், வகுப்பறையில் ஏற்ற நிலையை நிறுவுவதும் இயலாதனவாகின்றன. ஆசிரியர் தரம்படப் பணியாற்றவேண்டின் இவர்களது சமூகநிலை உயரவேண்டும், ஊதியம் போதிய அளவினதாக இருத்தல் வேண்டும், அவ்வப்போது இவர்கள் கல்வி கற்பிப்பதன் ஆற்றலைப் பெருக்கிக் கொள்வதற்கான வாய்ப்பு வேண்டும். முக்கியமாக நன்கு கற்றவர்களையே ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும்; வெளித்துறைகளிற் சென்று வேலை பெருதவர்கள், தமது வாழ்க்கை நிகழ்த்துவதற்காக வென்றே ஏற்றுக்கொள்ளும் பணியாகக் கூடாது,

---

எகோ (ECHO)

[சென்னை Educational Echo ஆகஸ்ட் வெளியீடு]



றியோ டி ஜனிரோ மாநகரில் நகராண்மை இசைநாடகக்கலையரங்க-மாளிகையில் கூடிய WCOTP பன்னிரண்டாம் மகாநாட்டின் தொடக்கநாட் கூட்டத்தின் ஒரு காட்சி.

முதல்தரக்கல்விப்போதனைக்கு இன்றியமையாது வேண்டிய சூழ்நிலைகள்

றியோ டி ஜனிரோ மாநகரில் WCOTP-இன் பிரதிநிதிகளின் பன்னிரண்டாம் பொதுமகாநாட்டில் ஸர் ரோனல்டு கௌல்ட் என்னும் பேரறிஞர் (WCOTP-இன் தலைவர்) தலைமைதாங்கி நிகழ்த்திய தலைமைப்பேருரை வருமாறு :

இலண்டன்மாநகரில் பிக்காஸோ என்னுங் கலைஞர் வரைந்த ஓவியங்கள் வைக்கப்பட்ட பொருட்காட்சியொன்று நடைபெற்றது. அப்பொழுது செய்தித்தாள்ஒன்று ஹாஸ்யச்சித்திரமொன்றனை வெளியிட்டது.

அச் சித்திரத்தில், பொருட்காட்சிச்சாலையில் இருந்த ஓவியங்களுள் ஒன்றனுக்கு எதிரே சிறுவனொருவன் நின்றுகொண்டு, மற்றொருவனை அழைத்து, "டேய், இங்கே வா, இங்கே வா. இதோ பார், உண்மையான அழகு !– 2½, 0, 96"– என்று கூறுவதாக இருந்தது. இக்காலத்தில், பெண்டிரும் பெரும்பாலும் பிற பொருள்களும் விளக்கப்படும் முறை இதுவேயாகும். இவ்வாறு நிறையையும் அளவினையும்குறித்தே கூறி விளக்குகின்றனர். அளக்கமுடியாதவற்றையும் ஆழ்ந்து ஆலோசிக்கமுடியாதவற்றையும்பற்றி ஒன்றும் கூறுவதில்லை.

கல்வித்துறையிலும் நாம் இவ்வாறே செய்கின்றோம். அரசியல்ஞானிகளும் அரசியல்அதிகாரிகளும் ஆசிரியர்களும் இன்று பள்ளிகளில் படிக்கின்ற குழந்தைகளின் அதிகத் தொகையையும் தகுதிப்பத்திரங்கள் பெறுவதையும் சுட்டிக்காட்டிப் பெருமைபாராட்டிக்கொள்கின்றனர் ; பல்வேறு நாடுகளில் பல்வேறு காலங்களில் உயர்தரக்கல்விகற்கும் மாணாக்கரின் தொகையை ஒப்பிட்டு மகிழ்கின்றனர். இரண்டாம் மகாயுத்தத்திற்குப் பிறகு கட்டப்பட்ட பள்ளிக்கட்டிடங்களின் தொகையையும் கல்வித்துறைக்கு இத்துணைப்பொருள் மிகுதியாகச் செலவிடப்பட்டுள்ளது என்பதனையும் பலரும் அறியுமாறு பத்திரிகையில் வெளியிடுகின்றனர் ; கல்விக்கென்று பிறநாடுகளில் செலவிடப்படும் பொருளைவிடத் தாம் தம் நாட்டில் அதிகமாகச் செலவிடுவதாகக் கூறிக் களிப்புக்கடலில் மூழ்குகின்றனர். நாம் முன்னேற்றத்தை அடைந்துகொண்டுவருகின்றோம் என்று வெற்றிமுரசு கொட்டுகின்றோம்.

இதுவே நமது இன்றைய நிலையாகும் முன்னினும் அதிக மக்கள் கல்விபயில்கின்றனர் ; தகுதிப்பத்திரங்களைப்பெறுகின்றனர் ; கல்லூரிகளில் சேர்கின்றனர் ; மேலும்மேலும் புதுப்பள்ளிக்கட்டிடங்கள் கட்டப்படுகின்றன ; நாட்டுப்பொருள்வருவாயின் அதிகப்பகுதி கல்விக்கென்று செலவிடப்படுகின்றது. இவை உண்மை. இவையாவும் முன்னேற்றத்தை அறிவதற்கு நற்சான்றுகளேயாகும். ஆயின், அளக்கத்தக்க புறவளர்ச்சியையே இது குறிக்கின்றது. கல்விபயிலும் மாணாக்கரின் தொகையையும் தகுதிப்பத்திரங்களையும், பள்ளிக்கட்டிடங்களையும், 'பவுன்', 'டாலர்', 'ஃப்ராங்க்', 'மார்க்' போன்ற நாணயச்செலாவணியையும் உள்ளத்தில் கொண்டு கல்வியின் தரத்தை நாம் அளத்தல் இயலாது. உடல், அறிவு, ஒழுக்கம், ஆத்மா இவற்றின் சிறப்புக்கள் வேறுவகையைச் சார்ந்தவை. அவை தொகையையும் எண்ணிக்கையையும்பற்றியவை அல்ல ; தரத்தையும் அகப்பண்பினையும் பொறுத்தவை. அவற்றைப் புள்ளிக்கணக்குக்களால் அளந்தறிதல் முடியாது. ஆராய்ச்சியாலும் கருத்துக்களாலுமே அவற்றின் மதிப்பை அளவிடல் முடியும். கல்வித்துறையில் தொண்டாற்றும் நாமும், அளக்கத்தக்க புறவழகுகளைக்கொண்டு, நல்லனசெய்வதாகப் பாராட்டிக்கொள்வதில் வியப்பொன்றும் இல்லையே ! அதனால் முதல்தரக்கல்வி எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பதனைப்பற்றிய வாக்குவாதத்திற்கும் நாம் இடந்தருவதில்லை. முதல்தரக்கல்விநிலை, மாறுபட்டுக் கொண்டிருக்கும் அறிவொழுக்க ஆத்மநிலைகளைக்கொண்டே, அளந்து மதிக்கப்படும். அவற்றின் பயனைப் பெறும் விடைகளும் பல்வேறு வகைப்படும். அவற்றின் விளைவு தர்க்கமும் பூசலுமே யாகும். அதிகப்பள்ளிகள் திறக்கப்பட்டன என்னுஞ் செய்தியை எவரும் மறுத்து வாதாட முடியாது. ஆயின், கல்வியின் தரம் வளர்ந்துகொண்டுவருகின்றது என்று ஒருவர் சொல்லின், அதனை

அனைவரும் ஒப்புக்கொள்ளார்; அது வாக்குவாதத்திற்கு இடந்தருவதாகும் ஒரு பெண்ணின் புறப்பண்பினை அளவிடுவது எளிது; ஆயின், அவளது அகப்பண்பினை அளவிட்டறிதல் மிக அரிது.

முதல்தரக்கல்வியின் இலக்கணம் யாது?

மேலே குறிப்பிடப்பட்ட வினாவினுக்கு ஏற்ற விடையை யான் அளித்தல்வேண்டும். இது நீங்கள் தேர்ந்தளித்த கேள்வி. ஆதலின், நானே ஏதாவது ஒரு தலைப்பினைத் தேர்ந்தெடுத்துச் சொற்பொழிவாற்று-தற்கு நீங்கள் எனக்கு இடந்தரவில்லை. ஆயினும், நீங்கள் இட்ட பணி-யைச் செய்ய முயல்கின்றேன். இது அரியதொரு பணி என்பதையும், என் கருத்துக்களுக்குப் பல எதிர்ப்புக்கள் இருக்கும் என்பதையும், நன்கு உணர்வேன். ஆயினும், முதல்தரக்கல்வியின் இலக்கணத்தையும் அதனை அளவிடும் முறையையும்பற்றி ஆராயவேண்டுவது என் கடமை. இவ்-வினாவிற்கு ஏற்ற விடையை அளிக்கும் விளக்கமும் அறிவும் பெறலாம் என்னும் நம்பிக்கையோடு, பலவேறு பாடப்புத்தகங்களைப் புரட்டிப்-பார்த்தேன். ஆயின், அவற்றில் கண்டவை ஒன்றற்கொன்று மாறுபட்டன-வாய் இருந்தன; அவை நேற்றைய உலகத்துக்கு அதிகப் பொருத்தம் உடையனவாய் இருந்தனவே அன்றி, இன்றைய உலகத்துக்கு வேண்டி-யனவாய் இல்லை. அதனால் பல செய்தித்தாள்களையும் வாரமாதசஞ்சிகை-களையும் ஆராய்ந்து பார்த்தேன். அவற்றிலும், முதல்தரக்கல்வியின் இலக் கணத்தைப்பற்றிய கருத்துக்கள் மறைபொருளாகக் காணப்பட்டனவே-யன்றி, திட்டவட்டமான முடிவொன்றும் காணப்படவில்லை. ஆயினும், அவற்றில் இரண்டு பரந்த முடிவுகள் இருப்பனவாகத் தோன்றின. முதலாவது, மிக்க பொருள்வருவாயைத் தரும் உத்தியோகங்களைப் பெறுதற்கு உதவிசெய்யுங் கல்வியே முதல்தரமானது-என்பதாகும். இக்-கருத்து இன்றைய கல்விமுன்னேற்றத்துக்குத் தக்க வலிமையுள்ள தூண்டு கோலாய் அமைகின்றது. இதனை நாம் எள்ளியிகழ்தல் ஆகாது. இரண்-டாவது, நல்லொழுக்கத்தைச் சிறிதுசிறிதாக மாணுக்கர்மனத்தில் பதிய-வைப்பதே முதல்தரக்கல்வியின் நோக்கம்-என்பதனை வற்புறுத்து-கின்றது.

இளைஞர்களுள் மிகப் பலர் காப்பிக்கடைகளில் காணப்படுகின்றனர்; அவர்கள் பழகும் முறைகள் வருந்தத்தக்கவையாயிருக்கின்றன; ஆண்களுக்-கும் பெண்களுக்கும் இடையே உள்ள தொடர்பு நல்ல முறையில் இல்லை; சிக்கனவாழ்க்கை சிறந்த குணமாக இனிக் கருதப்படவில்லை — இவை போன்ற சில குற்றங்குறைகள் இக்காலக்கல்வியின் விளைவுகள் என்று கூறுகின்றனர்; இக் குறைகளை நிறைவாக்க ஆவனசெய்தல் வேண்-டும் என்று கருதுகின்றனர். இக்காலஆசிரியர்கள், இவற்றைப்-பொறுத்தவரை, தங்களால் முடிந்ததைச் செய்துவருகின்றார்கள்.

'பள்ளிகள் இவற்றைச் செய்வதாகவே வைத்துக்கொள்வோம்; அவ்விரண்டு குறிக்கோள்களையும் அடைதற்கு வேண்டிய முறையில் கற்-பித்து, பொதுமக்களைத் திருப்தி செய்வதாகவே வைத்துக்கொள்வோம்.

இதுமட்டும் முதல்தரக்கல்வி ஆகுமா' — என்று என்னையே யான் கேட்டுக்கொண்டேன். ஆகும் எனறு யான் கருதவில்லை. பள்ளிக்கூடத்தை விட்டபிறகு ஒரு தொழிலைச் செய்தற்கு உரிய தகுதியை அளித்தலும், இக் குறுகிய அளவுகளில் நல்லொழுக்கம் உடையவராய் இருக்கச்செய்தலும் நியாயமான கல்வி, ஏன், ஓரளவு நல்ல கல்வி என்றும் கருதலாம். ஆயின், அது நல்லது எனினும், போதிய அளவு நல்லதாகாது; குறுகிய பயனை உடையது; நேற்றும் இன்றும் உள்ள வாழ்க்கைக்கு நெருங்கிய தொடர்புடையதாய்ச் செய்யப்பட்டுள்ளது; இக்காலத்து மாணக்கர் அனைவரும் தம் வாழ்க்கையின் பெரும்பகுதியை இருபத்தொன்றும் நூற்றுண்டில் கழிக்கப்போகின்றனர் என்னும் முக்கிய உண்மையைப் புறக்கணிக்கின்றது. ஆதலின், என்னைப் பொறுத்தவரை, மக்களைத் தொழிலும் தக்க ஓய்வும் பெறத் தகுதியாக்குவதே முதல்தரக்கல்வியின் குறிக்கோள் என்று இக்காலத்தில் கருதுவது போதாது என்றே எண்ணுகின்றேன். ஆயின், வரும் நூற்றுண்டில் வரும்—நாம் இன்னும் கற்பனையிலும் காணுத—பிரச்சினைகளை வெற்றிகரமாகத் தீர்ப்பதற்குத் தக்க அறிவும் அனுசரித்துப்போகும் ஆற்றலும் பெற்ற மக்களை உருப்படுத்துவதே முதல்தரக் கல்வியின் குறிக்கோள் ஆதல் வேண்டும்.

முதல்தரக்கல்வி தற்காலத்தை ஒட்டியதாய் இருத்தல்வேண்டும்:

"வருங்காலத்தேவைகளுக்குப் பொருத்தமுள்ள கல்வியை அளித்தற்கு, கற்பிக்கப்படுவதும் கற்பிக்கும் முறையும் ஆகிய இரண்டும் முழுதும் தற்காலத்தை ஒட்டியனவாய் இருத்தல்வேண்டும். வெற்றியளிக்குங் கல்வியாயின், அளிக்கப்படும் அறிவில் ஏதாவது புதுமை இருத்தல் வேண்டும் புது உலகத்துக்கும் புதுக்காலத்துக்கும் பொருந்தும் ஏதாவது புதுமையொன்று அதில் காணப்படுதல்வேண்டும். கல்வியறிவு மாறுதல் அடையாமல் நீண்டகாலம் இராது மீனைக்கெடாமல் நெடுங்காலம் வைத்துக்கொள்ளல் இயலாது. அதுபோலத்தான் அறிவும். புதிய சேர்க்கையால் மாறுபடாத கல்வியறிவு கெட்டுவிடும் என்பது A. N. ஒயிட்ஹெட் என்னும் அறிஞரின் கருத்து. அது முற்றிலும் உண்மை. அறிவு எனப்படுவது துணியில் மூடிக் கயிற்றால் கட்டிக் குழந்தைகள்கையில் கொடுக்கும் ஒரு பொருளன்று. அது மாறிக்கொண்டேயிருக்கின்றது. நாள்தோறும் சரித்திரம், பூகோளம், விஞ்ஞானம் ஆகிய கலைகளில் புதுப்புதுச்செய்திகளை அறிகின்றோம். இசைக்கலை புதிய உருவங்களைப் பெற்று, புதிய இன்பத்தை அளிக்கின்றது. பழைய சொற்கள் கழிகின்றன. பழைய சொற்கள் புதுப்பொருள்களை ஏற்கின்றன. அவ்வாறு இருப்பினும், பள்ளிகள் புதுஅறிவை ஏற்றுப்பெறுதற்கு நீண்ட காலதாமதமாகின்றது. நாம் இக் குறையை நீக்குதல் வேண்டும். கற்பிக்கப்படும் பொருளும் முறையும் இக்காலத்தை ஒட்டி அமைதல்வேண்டும்.

கற்பிக்கும் முறைகளைப்பற்றிய புதிய அறிவினை வகுப்பறையில் பயன்படுத்தல்வேண்டும். ஆயின், இக்காலத்தில் பியா கெட் என்னும் அறிஞரும் பிறரும் ஆராய்ந்து அறிவித்த புதுமுறையை மேற்கொள்ளாமல், தம் பழைய அனுபவங்களை ஒட்டிய முறைகளையே பெரும்பாலும் இன்றும் பின்பற்றுகின்றனர்.

சிந்தனையைத் தூண்டுவதே முதல்தரக்கல்வியின் இலக்கணம் :

மேலே கூறியதுமட்டும் போதாது. தற்காலச்செய்திகளைத் தற்காலமுறைகளில் அடைவதனைவிட மிக்கதொரு குணமும் முதல்-தரக்கல்விக்கு வேண்டும். முப்பது ஆண்டுகளுக்கு முன்னர், தாம் கல்லூரியில் கற்றவற்றையெல்லாம் ஒருவருக்கு ஐம்பது நிமிடத்-தில் எடுத்துக் கூறி, அவர்க்குக் கல்லூரிக்கல்வியின் பயனை அளித்துவிட முடியும் என்று ஸ்டீபன் லீ காக் என்னும் அறிஞர் ஓரிடத்தில் கூறினர். 'லிட்மஸ்' தாளை அமிலத்தில் ஆழ்த்துவதில் ரசாயனக்கல்வி அடங்கியுள்ளது. பின்னர், அத் தாள் நீலமாக மாறிற்ரு, அன்றி, மங்கிய சிவப்பு நிறமாக மாறிற்ரு என்பது அவருக்கு நினைவில்லை ! பொருளாதாரக் கலை விளைவுதேவைச்சட்டத்தை (Law of supply and demand) அடிப்-படையாகக் கொண்டது. அச் சட்டம் இப்பொழுது நீக்கப்பட்டது. நாம் கல்லூரியில் பெற்ற அறிவின் சுருக்கத்தை அறிவிக்கவேண்டும் என்று ஒருவர் கூறினல், நம்முள் பெரும்பாலோர் ஸ்டீபன் லீ காக்-ஐ விட நல்ல முறையில் கூறமுடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. நகைச்சுவை ததும்பக் கூறும் ஆற்றலைப் பெற்ரோர் இங்கனம் தமக்கு உள்ள உரிமையை எம்முறையிலும் பயன்படுத்திக்கொள்ளலாம். உலகம் அவர்களைக் குறை-கூருது. ஆயின், நாம் நம் குறைகளை வெளிப்படையாக ஒப்புக்கொள்வோ-மாயின், மூடர்கள் என்றும் கல்வியறிவற்ரோர் என்றும் இழித்துக்கூறப்படு-வோம். விஷயத்துணுக்குக்களை மாணுக்கர்மனத்தில் பதியவைப்பதே கல்வி என்று பெரும்பாலோர் கருதுகின்றனர்.

"குழந்தைகள்மனத்தில் ஒன்றுமில்லை. அவைகள் காலியாய் இருக்-கின்றன. அவற்றுள் பல கருத்துககளைத் திணித்து நிரப்புதல் வேண்டும். பலவற்றைப் பொட்டைநெட்டுருப்பண்ணச்செய்தல்வேண்டும். படித்தல், எழுதுதல், கணக்குப்போடுதல் (3 R's) இவற்றைச் செய்யினும், இன்னும் தொடர்ந்து செய்யவேண்டுவது மிகுதியாய் இருக்கின்றது"–என்பது ஒரு ஆங்கிலச்செய்யுளின் கருத்து.

உனக்குப் பலகருத்துக்கள் தெரியுமாயின் நீ கற்றறிந்தவன்; இல்லை யெனின், அவற்றைப் பெற்று மறந்தாயாயினும், ஒருபொழுதும் பெற-வில்லையாயினும், நீ கற்றவனுகக் கருதப்படமாட்டாய்.

கௌபர் என்னும் புலவர், இக் கருத்துக்கு மாருக, ஒரு செய்யுளைப் பாடியுள்ளார். அது சொற்செறிவற்றதாயினும், பொருட்செறிவு கொண்டு-ளது. அதன் கருத்துப் பின்வருமாறு :

"பள்ளிகள் வறுங்கேலிக்கூத்துக்கும் அறியாமைக்கும் உறைவிட-மாய் உள்ளன ! மாணுக்கர் ஒவ்வொருவரும் பெற்றுள்ள அறிவு பிறருடை-யது. கிளிப்பிள்ளையைப் போன்று பிறர் கூறியவற்றையே கூறிக்கொண்டு, அவர்கள் நுண்ணறிவின்றி நன்மாணுக்கர்போல் தோன்றுகின்றனர் ! இறு-தியில் பல்கலைக்கழகப்பட்டமும் பெற்றுவிடுகின்றனர் ! இவர்கள் பட்டம் பெற்ற மூடர்களாகவே வாழ்கின்றனர் ! நம் கல்விநிலை இருந்தவாறு என்னே !"

இப் புலவரைப்போல், இக் 'கிளிப்பிள்ளை'க்கல்வியை ஏற்க மறுப்ப-வர் பலர் இன்னும் உளர். "பல செய்திகளைமட்டும் நன்கு அறிந்திருப்ப-

வன் மண்ணுலகில் பயன்சிறிதுமற்ற சணப்பன் என்று கருதப்படுவான் என்பது ஏ. என். ஒயிட்ஹெட் என்பவரது கருத்து. "போதனுமுறைகளி லும் கல்விப்பயிற்சியிலும் முன்னேற்றத்தைப் பெறவேண்டுமாயின், கற்பவரைச் சிந்திக்கச்செய்தல் வேண்டும் ; அவர்கள் சிந்தனையை வளர்த்தல் வேண்டும். அவற்றைப் பரீக்ஷித்தல் வேண்டும். இம்முறைதான் அதற்குரிய நேர்வழி"—என்று ஜான் ட்யூயி கூறியுள்ளார்.

தற்கால நாடகாசிரியராகிய ஆர்னல்டு வெஸ்கர் என்னும் அறிஞர், 'பீட்டி பிரியன்ட்' என்னுந் தம் நாடகத்தில், "தற்காலக்கல்வி புத்தகங்களையும் கீதங்களையுமே அளிக்கின்றது. எப்பொழுதும் அவற்றிலேயே விளக்கைக் கேட்டுக்கொண்டிருக்கின்றது" என்று எழுதியுள்ளார். இக்காலத்தில் உள்ள சில முதலாளிகளும் இதனையே கூறுகின்றனர்; தங்கள் அலுவலகங்களில் புதிதாக வேலைக்கு அமர்த்தப்பட்டவர், தம் குறுகிய பரீட்சையெல்லைக்குள் சிறப்புடையவராகவே காணப்படுகின்றனராயினும், அவர்களுக்குப் பிறரோடு ஒத்துப்போகும் மனப்பான்மையும் பிடிவாதமில்லாத மனமும் இல்லை என்றுரைக்கின்றனர்.

மேலே கூறப்பட்ட அறிஞர்கருத்துக்களனைத்தும் சரியானவையே. அகராதிபோன்ற அகன்ற அறிவுமட்டும் போதாது.: மாணுக்கரின் நினைவாற்றலை வளர்ப்பதுமட்டும் போதாது ; புதியனவற்றை அறியும் ஆர்வத்தையும் எழுப்புதல்வேண்டும். எல்லாக்கருத்துக்களையும் ஆசிரியரே கொடுத்துவிடக்கூடாது. மாணுக்கர்கள் தாமே முயன்று பலகருத்துக்களைத் திரட்டும்படி செய்தல் வேண்டும். நினைவாற்றலை வளர்த்தலும், கருத்துக்களையெல்லாம் ஆசிரியரே கூறிவிடுவதும் எளியனவே. ஆயின், அவை மனத்தின் வளர்ச்சிக்குத் தடையாகும். ஆர்வத்தை எழுப்புதலும் மாணுக்கரையே கருத்துக்களைத் திரட்டச் செய்வதும் மிகக் கஷ்டமான செயல்களே. ஆயின், அவை மாணுக்கர் மேலும்மேலும் வளர்ச்சிபெற்றுக்கொண்டேயிருப்பதற்கு உதவும்.

எதைப்பற்றிச் சிந்திக்கவேண்டும் என்று மாணுக்கனுக்குக் கற்பிப்பது தலைசிறந்த கல்வியாகாது ; எவ்வாறு சிந்திப்பது என்பதுவே முதன்மையானது. இதன் பயனுக அவன் புதிய கருத்துக்களைத் தேடித் தெரிந்தெடுத்துச் சிந்திப்பான். ஒவ்வொன்றன் காரணத்தைப்பற்றியும் ஆராயும் பழக்கம் அவனுக்கு ஏற்படும். பல ஆண்டுகளுக்குப்பிறகு, அவன் பள்ளியில் பெற்ற அறிவு வாழ்க்கைக்குப் பொருத்தமற்றுப் பயன்படாமல் போயினும், மறக்கப்படினும், அக்காலத்திற்கு ஏலாததாயிருப்பினும், புதிய அறிவைத் தேடியடையவும் எல்லாவற்றையும் மிகத் தெளிவாக அறியவும் புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு அனுசரித்துப்போகவும் வேண்டிய ஆற்றலை அவன் இன்னும் பெற்றிருக்கின்றுன் என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

புகழ்பெற்ற ஆங்கில நியாயவாதியான ஸ்மித் என்பவர் ஒருமுறை நீதிமன்றத்தில் தம் கட்சிக்காரரின் சார்பாகப் பேசிமுடித்தபிறகு, பொறுமையற்ற நீதிபதி, "சரி, நீங்கள் இவ்வளவு கூறியும் எனக்குத் தெளிவு பிறக்கவில்லையே" என்று கடுஞ்சொல்லால் கூறினுர். உடனே அந் நியாயவாதி, "இருக்கலாம். ஆயின், இப்பொழுது அதிக விஷயங்களைத் தெரிந்துகொண்டிருப்பீர்கள் என்று நம்புகின்றேன்" என்று கூறினுர்.

புதிய விஷயங்களை அறிவதும் அறிவுபெருகுவதும் ஒன்ருகா. ஆதலின், கருத்துக்களைமட்டும் திணிப்பது முதல்தரக்கல்வி ஆகாது. அறிவை வளர்ப்பது அதனினும் மிக அரிய செயல்.

முதல்தரக்கல்வி ஆத்மீகமானது :

சிந்தனைப்பயிற்சியையும் தற்காலவறிவினையும்விட, வருங்காலத் தேவைகளுக்குப் பயன்படுங் கல்வியே சாலச் சிறந்தது. அது இளைஞரின் முழுவளர்ச்சிக்கும் கவனஞ்செலுத்துதல்வேண்டும். மூளைவேலையொன்றே தலைசிறந்த கல்வி ஆகாது ; மனோபாவங்கள், அறிவு, உணர்ச்சி, சிந்தனை, அருள், ஞானம் எல்லாவற்றையும்பற்றியதே அக் கல்வி.

பல நூற்ருண்டுகளாக நம் முன்னோர்கள், கல்வியின் பயன் அறி-வொன்றனையுமே வளர்ப்பதன்று; மனிதன் வாழும் வகையையும் அறிவிக்க வேண்டுவதாகும்—என்று கருதிவந்தனர். தத்துவஞானிகள் மனிதனியற்-கையைக்குறித்து எழுதினர். நம் மதங்கள் மனிதன் மேலும்மேலும் மனத்தூய்மை பெறும் வழியைக் காண்பித்தன. நம் புலவர்களும் புதுக்-கதைபுனைவோரும் நாடகாசிரியர்களும், மனிதவாழ்க்கையில் உள்ள அமைதியின்மை, மாறுபாடுகள், இழிவுகள், பெருமை முதலியவற்றை விளக்கியெழுதினர். அவை பிறருடைய உள்ளங்களையும் இதயங்களையும் மனோபாவங்களையும் செயல்களையும் பாதித்தன.

இக்காரணத்தினுல்தான் எனக்கு ஷேக்ஸ்பியர் இயற்றிய நூல்களில் மிக்க ஈடுபாடும் இன்பமும் உண்டாகின்றன. அவருடைய கவிகளில் கற்பனை மிகச் சிறந்தது என்பதும், ஒழுக்கமுள்ள பாத்திரங்களில் மிக்க நுண்ணறிவைப் புலப்படுத்துகின்ருர் என்பதும் உண்மையே. ஆயின், நான் அவர்பெருமையைப் பாராட்டுதற்குக் காரணம் வேறு. அஃது யாதெனின், என் வாழ்கைப்பகுதி, எண்ணங்கள், கொள்கைகள், சுபாவங்கள், செயல்கள் இவற்றுள் சிலவற்றை, அப் புலவர் விரித்துக்கூறும் நாடகபாத்திரங்களி லும் காண்கின்றேன் என்பதுதான். ஹாம்லெட் தன்னை வினவிக்கொள்-கிருன், "இருப்பதா, இறப்பதா என்பதுதான் இன்றைய கேள்வி" என்று. நானும், அவனைப்போல், அடிக்கடி மனவுறுதியின்றி மனங்குழம்பித் தவிக்கும் நிலையில் இருப்பதனைக் காண்கின்றேன். மாக்பெத்தைப் போன்று, "செய்யவேண்டியதைச் செய்யும்பொழுது, அதனை நன்ருக விரைந்து செய்தல் வேண்டும்" என்று யானும் அடிக்கடி எண்ணுகின்றேன். WCOTP மகாநாடுகள் நடைபெறும்பொழுது, நண்பரொடு விருந்துண்டு களித் திருக்குங்கால், இரவில் நெடுநேரமாயின், நண்பர் டோபி பெல்சிடம் "நேரம் அதிகமாகிவிட்டது ; உறங்கச் செல்லல்வேண்டும்" என்று கூறுவது வழக்கம். அப்பொழுதெல்லாம், "மற்ருேரைவிட எனக்கு உடலில் தசை மிகுதியாய் உளது ; அதனல், யான் அதிக பலவீனனுய் இருக்கின்றேன்" என்று துக்கத்துடன் கூறிய ஃபால்ஸ்டாஃப் என்னும் நாடகபாத்திரத்தை எண்ணியிரங்குவது உண்டு.

நான் தலைசிறந்த கல்வியைப் பெற்றுவிட்டதாகச் செருக்குக் கொள்ளவில்லை. ஆயின், நாம் எதனைப் படித்தாலும், 'இது என் வாழ்க் கையையும் பிறருடைய வாழ்க்கையையும் எவ்வாறு பாதிக்கின்றது ?'

என்பது போன்ற வினவை எழுப்பிக்கொண்டு ஆராயின், நாம் கற்ற ஒவ்வொன்றும் சமூகத்தில் இன்னுஞ்சிறந்து வாழ்தற்கு உதவிசெய்யும். 'மனிதப்பண்போடு கூடிய தாராளக்கல்வி' என்று நாம் கூறுவது இஃதே யாகும். இக் கல்விமுறை, நம்மை அடிமையாக்காமல், நாம் மனிதராகச் சிறப்புடன் வாழ, உதவும்.

மார்டின் பூபர் என்னும் யூதஞானி, நாம் பிறருடன் கொள்ளுந் தொடர்பு — (1) தன்னைப்பற்றியது, ' நானும் நீயும், என்னுந் தொடர்பு (Personal) ; (2) தன்னைப்பற்றாதது, தனக்குப்புறம்பானது, ' நானும் அதுவும் ' (நான் வேறு அது வேறு என்னுந் தொடர்பு (Impersonal) என்று இருவகைப்பட்டது என்பர். கல்வித்துறையில், விஞ்ஞானக்கல்வி இரண்டாம் வகையைச் சார்ந்தது என்றும், அது முதல்வகையைச் சார்ந்த இலக்கியக்கல்வியினும் இழிந்தது என்றும் பலர் தவறாக எண்ணுகின்றனர். இது உண்மையன்று. விஞ்ஞானம் இலக்கியம் இவ்விரண்டும் மந்தப்-பொருள்களாய், மனிதப்பண்பு நீக்கப்பட்டனவாய்க் கற்பிக்கப்படலாம் ; அன்றியும், மனிதப்பண்பும் வாழ்க்கைக்குத் தொடர்பும் உடையனவாயும் கற்பிக்கப்படலாம். பின்கூறப்பட்ட முறையில்தான் அவை கற்பிக்கப்படல் வேண்டும்; அன்றெனின், அக் கல்வியின் பயன் வறண்ட பயனற்ற அறி-வேயாகும்.

'விவிலிய நூலின் புதிய ஏற்பாட்டின்' மொழியெர்ப்பில்-(மொழி-பெயர்த்தவர் ஃபிலிப்)—பின்வருந் தெளிவான உறுதிமொழி உளது: "நூலறிவு ஒருவனைப் பெரியவனுக்க இயலும் ; ஆயின், அவன் தன் முழு-வளர்ச்சியையும் அடையும்படி செய்வது அன்பே". அன்பு என்பது மாசற்றதாயின், கற்பனைசெய்யப்பட்டதன்றாயின், அது இரக்கம், அநு-தாபம், அனைத்தையும் அறித்துகொள்ளும் ஆற்றல், நம்பிக்கை-(இவையே குடும்பம், நண்பர், உடன்வேலைசெய்வோர், நாட்டுமக்கள், உலகம் இவர்-களோடு இணைந்து வாழும் வாழ்க்கைக்கலைக்கு இன்றியமையாத குணங்-கள்)-என்பவற்றின் சேர்க்கையாயின், அந்த 'ஏற்பாட்டில்' காணப்படுங் கருத்து வெளிப்படையுண்மையாகும். அறிதல், அன்புகொள்ளுதல் என்னும் இரண்டும் மனிதனல் செய்யக்கூடியவையே. தன்னைத் தலையாகச் செய்தற்கு ஏற்ற முழுவளர்ச்சியையும் பெறுதற்கு விரும்புவாஞயின், அவன் இவ்விரண்டிலும் தேர்ச்சிபெற்றிருத்தல்வேண்டும்.

ஆயின், கடும்நோன்புகளை மேற்கொள்வோர் (stoics) இவற்றில் எதனையும் விரும்பார். அவர்கள் உணரவும் கவலைப்படவும் சக்தியற்ற தன்மையை வளர்க்குமாறு மக்களை வற்புறுத்துகின்றனர். தற்காலச் சமூகமும் இத் தன்மையைக் கொண்டுளது. ஒருவர் ஒரு கேள்வியைக் கேட்பின், அதற்கு விடையாக மற்ரெருவர். ' எனக்கு ஒன்றும் தெரியாது' என்றோ, 'ஆமாம், அப்படியிருந்தால் என்ன ?' என்றோ கூறின், இது அம் மௌட்டீகத்தின் ஓருருவம் என்பதனைத்தவிர, வேறு என்ன என்று சொல்லமுடியும் ? இனி, நம் கடமை என்ன ? உணர்ச்சியும் அக்கறையும் இல்லாத இத் தன்மையை முதர்தரக்கல்வி வெறுத்து விலக்குதல் வேண்டும். ' எனக்கு அதைப்பற்றி ஒன்றும் கவலைபில்லை ' என்று கூறும் அத்தத்துவத்தின் தற்காலமாறுபாட்டுருவத்தையும் புறக்கணித்தல் வேண்டும். எதனையும் அக்கறையோடு செய்யும் பழக்கத்தைக் குழந்தை-களுக்கு நாம் கற்பித்தல்வேண்டும்.

நாம் கவலையும் அக்கறையும் இன்றி இருப்பின்,—காரல் காபெக் இயற்றிய " R.U.R. ", " பூச்சிவிளையாட்டு" என்னும் நூல்களிலும், சார்லி சாப்லின் இயற்றிய 'தற்காலம்' என்னும் நூலிலும், பலவாண்டுகளுக்கு-முன்னரே எச்சரிக்கைசெய்திருப்பது போல,—மக்கள் பொம்மைச்சித்திரங்-களாய் எறும்புகளாய் இருத்தல் வேண்டிய நிலை வரும். சார்லி கருவியால் மரையை முடுக்கும் உணர்ச்சியற்ற தொழிலையே நெடுநாள் செய்துவந்ததன் பயனாக, ஒரு யந்திரத்தின் நிலையை யடைந்ததும், அதனால், அவர் நடந்துசென்றுகொண்டிருக்கும்பொழுது மரையில்லாத இடங்களிலும் முடுக்கிக்கொண்டே சென்றதும் ஆகிய வியப்புச்செய்தி உங்களுக்கு ஞாபகமிருக்கும் !

நாம் கவலையும் அக்கறையும் இன்றி இருப்பின், நாம் போற்றிப் பாராட்டும் பொருள்களெல்லாம்—நம் உரிமையுள்ள சமூகம், தொழிலிலும் சமூகத்திலும் உள்ள ஒற்றுமை, குடியரசுவாழ்க்கைமுறை, போரில்லாத உலகம் முதலான எல்லாம்—பாழாகும். கால்பிரெய்த் என்னும் அறிஞர் 'செல்வம் மிக்க சமூகம்' என்னும் நூலில் கூறியவாறு, மனிதன், தான் பெற்றுள்ள சிறப்புத்திறமையுடன் ஒன்றுபட்டு வாழும் ஆற்றலையும் பெற்றிராவிடின், சில தேசங்களில் உடனடியாகக் கவனிக்கவேண்டிய கஷ்டங்களைப் போக்கமுடியாது; கல்வியும் பிற சமூகத்தேவைகளும் போது-மான அளவு கிடைக்கப்பெறாத மக்கள், எல்லாவற்றைம் உணராமலும் கவ-லையும் அக்கறையும் கொள்ளாமலும் வாழின், நிறத்தடை, பெண்களின் இழிந்த நிலை, அடக்குமுறையரசியல்திட்டங்கள் முதலியவற்றைப் போன்ற பிரச்சினைகளை வெற்றிகரமாகச் சமாளித்தல் இயலாது.

தலைமையாசிரியராகவும், 'ஆர்ச்பிஷப்' - ஆகவும், சான்றோராகவும் வாழ்ந்து தொண்டாற்றிப் புண்ணியபுருஷனாய்ப் பெரும்புகழ் பெற்று விளங்கும் வில்லியம் டெம்பிள் என்னும் அறிஞர், முன்பொருமுறை பின்-வருமாறு எழுதினார் : " கல்வியின் குறிக்கோளைக் கீழ்க்காணுமாறு சுருக்கிக் கூறலாம் ; அது, விலங்கு எந்திரம் இவற்றினின்று மனிதனை வேறுபடுத்-துங் குணவொழுக்கமனைததினையும் வளர்ப்பதே ஆகும். கல்வி, அறிவினை ஒழுங்குபடுத்தி, கற்பனையைத் துரிதப்படுத்தி, அன்பினையும் அருளையும் பெருக்குதல் வேண்டும்-"

நூற்றாண்டுகளுக்குமுன் வாழ்ந்த சமயச்சீர்திருத்தவாதிகளாகிய 'சார்டிஸ்ட்ஸ்' என்போர், " மனிதனின் கௌரவத்தை மிகுவித்து, வாழ்க்-கைக்குக் களிப்பூட்டும் பொதுக்கருவியே கல்வி " என்று விளக்கங்கூறினர். இருவர்கூற்றும் முற்றிலும் சரியே. அறிவு, கற்பனை, அன்பு, அருள் எல்லாம் அடங்கியதே கல்வியாகும் அது ஆத்மவளர்ச்சிக்குப் பயன்-படல் வேண்டும்.

என்னைப் பொறுத்தவரை, பழம்பண்பாட்டோடு புதியதையும் சேர்த்துக் குழந்தைகளுக்குக் கற்பிப்பதே தலைசிறந்த கல்வியாகும். அறிஞர்களைப் படைப்பதினும் சிந்தனையாளர்களைப் படைப்பதே அக் கல்வியின் குறிக்-கோளாகும். அது அறிவினை வளர்ப்பதோடு, ஒழுக்கவளர்ச்சிக்கும் ஆத்ம-வளர்ச்சிக்கும் உதவுதல் வேண்டும்.

தலைசிறந்த கல்விக்கு இன்றியமையாது வேண்டுபவை :

சூழ்நிலை

இம்மாதிரிக்கல்வியைக் கற்பிக்க மிக முக்கியமான பொருள்கள் மூன்று வேண்டும் : (1) நல்ல இயற்கைச்சூழ்நிலை ; (2) போதுமான ஆசிரியர்கள் ; (3) நல்லாசிரியர்கள்—என்பனவே அம் மூன்று ஆகும். அரசாங்கங்களும் பள்ளிகளை நடத்தும் அறிஞர்குழுக்களும் உள்ளூர் அதிகாரிகளும் இப் பொருள்களை அமைத்துத் தருதல்வேண்டும்.

முதற்கண், சூழ்நிலையைப்பற்றி ஆராய்வோம் : வெறுப்பைத் தரும் பள்ளிக்கட்டிடங்கள், இக்காலத்திற்குப் பயன்படாத உபகரணங்கள், புத்தகங்கள் போதிய அளவு இல்லாமை இவற்றைக்குறித்து யாராவது கண்டித்தால், "இவை வேண்டியதே இல்லை; இவை முக்கியமானவையல்ல; நமக்கு வேண்டுவதெல்லாம் ஆசிரியரின் உயர்பண்பே" என்று சிலர் நிச்சயமாய்க் கூறுவர். இவர்கள் கூறுவது காதுக்கு இனியதாய்த்தானிருக்கின்றது. ஆயின், இவர்களே பள்ளிகள்விஷயத்திலும் ஆசிரியர்கள்விஷயத்திலும் சிக்கனத்தைக் கையாள விரும்புகின்றார்கள். மற்றவற்றைப்பற்றி அவர்கள்கருத்து எவ்வாறு இருப்பினும், நல்ல சூழ்நிலை என்பது அவசியமானதன்று என்று கருதுகின்றார்கள். அது முக்கியமானதன்றோ?

'பிரேஸில்' நாட்டில் ஒரு புத்தகம் அண்மையிலே வெளியிடப்பட்டது. அது நன்கு விற்பனையாயிற்று. அது கரோலினா மேரியா டி ஜீஸஸ் என்பவரின் நாட்குறிப்பு. 'ஸவோ பாலோ என்னுமிடத்தில் உள்ள எளியோர் வாழுங் குப்பத்தில் என் வாழ்க்கை' என்று குறிக்கப்பட்டுளது. "Beyond all pity" என்பது அந் நூலின் பெயர். அந்நூலில் குப்பத்தில் வாழும் மக்களின் வாழ்க்கையை உள்ளம் உருகும் நடையில் விளக்கிக்கூறுகின்றார். அவர் பின்வருமாறு எழுதுகின்றார் : "சிலசமயங்களில் பல குடும்பங்கள் குழந்தைகளோடு அக் குப்பத்துக்கு வந்து தங்கி வாழ்கின்றன. முதன்முதல் அவர்கள் நற்பண்பும் நட்புணர்ச்சியும் உடையவராய் இருக்கின்றனர் ; சில நாட்களுக்குப் பிறகு, ஆபாசச்சொற்களைச் சொல்கின்றனர்; அற்பவுள்ளம்படைத்துப் பிறரை வம்புக்கு இழுக்கின்றனர் ; வைரங்கள் காரீயமாய் மாறிவிட்டன ! நல்வாழ்வுக்கு வேண்டிய பொருள்கள் உள்ள வாசஸ்தலத்திலிருந்து குப்பைக்குழியில் வீழ்த்தப்பட்டுள்ளனர் !". அப் பெண்மணியார் எவ்விதமான மாயைக்கும் வசப்பட்டவரல்லர். கெட்டசூழ்நிலை, வைரத்தைக் காரீயமாக மாற்றுகின்றது ; நல்ல உறைவிடங்களிலிருந்து குப்பைகூளம் மிக்க அறையில் மக்களைத் தள்ளுகின்றது.

ஆக்டன் நாஷ் என்னும் புலவர் இக் கருத்தினையே, நகைச்சுவை ததும்ப, ஒரு செய்யுளில் கூறியுள்ளார். அதன் திரண்டவ கருத்து வருமாறு; "மக்கள், பேசும் இயல்பு உடையவராயினும், எப்பொழுது பேசாமல் மௌனமாய் இருத்தல்வேண்டும் என்பதனையும் உணர்ந்தொழுகுவர். கப்பற்கூலியாள் தன்னை இழித்துக் கூறுவோர் இருக்கும் சூழ்நிலையை உணர்ந்து, மௌனமாய்த் தன்வேலையில் கண்ணுங்கருத்துமாய் இருக்கின்றான். மரம்வெட்டும் ஒருவன், யாரிடம் என்ன கூறுகின்றோம் என்று உணர்ந்தே, எண்ணிப்பேசுகின்றான். மோட்டாரோட்டுபவன், தன்னைச்சூழ இளைஞர் இருப்பின், நாவை அடக்கிக்கொள்கின்றான். இவற்

றிற்கெல்லாம் காரணம் என்ன ? 'சூழ்நிலைக்குப்பொருத்தமற்ற சொற்கள் விபரீதத்தை விளைவிக்கின்றன. நாவடக்கமின்றி, தீய சூழ்நிலையில், கூறப்படும் விஷமச்சொற்கள் சங்கொலிபோல் எங்கும் பரவிவிடும்'— என்பதனை அவர்கள் உணர்வர்.

சூழ்நிலை ஒழுக்கத்தையும் பேச்சினையும் கெடுக்கின்றது. நாம் பிறந்த உயர்குடியில் பிறவாதிருப்போமாயின், நல்ல வாய்ப்புக்கள் அளிக்கப்படா-மல் இருப்போமாயின், நம் வாழ்க்கை முற்றிலும் மாறுபட்டேயிருக்கும். ஒருவனை உருவாக்குவது சூழ்நிலையே. கெட்ட சூழ்நிலை ஒருவனைத் தாழ்த்துகின்றது ; நல்ல சூழ்நிலையோ உயர்த்துகின்றது. குழந்தைகள் விகாரமான சூழ்நிலைகளில் கற்பிக்கப்படின், அவர்கள் அழகினையும் நல்ல வாழ்க்கையையும் உணர்ந்து பாராட்டுவார்கள் என்று நாம் எவ்வாறு எதிர்பார்க்கமுடியும்? தங்கள் வீடுகளிலும் சூழ்நிலைகளிலும் அழகுப்பொருள்-களும் நல்ல வாழ்க்கையும் வேண்டும் என்று விரும்பும் முறையில், அவர்கள் வளர்ச்சியுறமாட்டார்கள். ஆதலால், பள்ளிக்கூடம் அழகாயிருத்தல் வேண்டும்.

அரசாங்கங்கள் நல்ல வாழ்க்கை முக்கியமானதன்று என்று ஒரு-வேளை கருதினும், பள்ளிக்கட்டிடங்கள் கல்விக்குரிய வாய்ப்புக்களைக் கூட்டவும் குறைக்கவும் ஆற்றல் பெற்றுள்ளன என்பதனையாவது ஒப்புக்-கொள்ளுதல் வேண்டும். சில மாதங்களுக்குமுன் ஒரு புதிய பெண்கள்-ஸெகண்டரிப்பள்ளிக்கூடத்திற்குச் சென்றிருந்தேன் (அது என் தாய்-நாட்டில் இல்லை). என்னை இரசாயனப்பாடம் கற்பிக்கும் அறைக்கு அழைத்துச்சென்றனர். ஆங்குச் சில சோதனைக்குழாய்களும், குடுவைக-களும், புன்சென்' அடுப்புக்களுமே இருந்தன. அதனால் ஆசிரியர் ஒருவரே பரிசோதனை செய்யவேண்டியிருந்தது. இச்சமயத்தில் புகழ்பெற்ற கணிதசாஸ்திரியும் அறிஞருமாகிய A. N. ஒயிட்ஹெட் என்பவர் கூறி-யது எனக்கு நினைவுக்கு வருகின்றது. அவர்கூற்று வருமாறு: "ஒவ்வொரு குழந்தையும் தானே புதியனவற்றைக் கண்டுபிடித்து, அதன் பயனாக விளைந்த மகிழ்ச்சியை அனுபவிக்கவேண்டும்". 'மாணாக்கன் தானே பரிசோதனை செய்து புதிய பொருள்களைக் கண்டுபிடித்துக் களிப்புற முடிய-வில்லை எனின், இரசாயனக்கல்வியைத் திருப்தியாகக் கற்பிக்கமுடியும் என்று எவராவது உண்மையாக நம்புவாரோ ?' என்னும் வினாவை எழுப்-பிக்கொண்டேன். நூல்நிலையம் இல்லையெனின், புத்தகங்களைப் படிப்பதற்-குக் குழந்தைகள்மனத்தில் ஆவலை எழுப்ப முடியுமோ ? எல்லா நூல்களும் பண்டைக்காலத்தனவாய் இருப்பினும், ரேடியோ, ஒலிப்படம், டெலிவிஷன் இவை இல்லையெனினும், தற்கால ஆராய்ச்சியறிவைப் பெறல் இயலுமா ? இவற்றைப்பற்றி நாம் கண்டித்துக்கூறாமலிருத்தல் தவறு. உலகம்முழுதும் கோடிக்கணக்கான குழந்தைகள், வெறுப்பூட்டுங் கட்டிடங்களில் தங்கி, போதிய புத்தகங்களும் உபகரணங்களும் இன்றி, கற்பிக்கப்படுகின்றனர். இவற்றால் விளைவது கல்விக்கேடே. இக் குறைகளைக் குழந்தைகளும் பெற்றோர்களும் உணராமலிருக்கலாம். ஆயின், அக் குழந்தைகள் பெறுவதற்கு உரிமையுள்ளவற்றைப் பெறாமல் ஏமாற்றப்பட்டவராவர் என்பது உண்மை. மேற்கூறியவற்றால், நலைசிறந்த கல்விக்கு முதற்கண் வேண்டுவது நல்ல சூழ்நிலை என்பதனை உணர்தல்வேண்டும்.

தலைசிறந்த முறையில் கற்பித்தற்கு வேண்டும் பொருள்கள் : ஆசிரியர்களின் தொகையை மிகுதிப்படுத்தல் :

முதல்தரமான முறையில் மாணுக்கருக்குக் கற்பிக்க வேண்டுமாயின், அதற்கு ஆசிரியரின் தொகையை மிகுதிப்படுத்தல் வேண்டும். இரண்டாவதாக இன்றியமையாது வேண்டப்படுவது இதுவேயாகும். இக் கடமையை எந்நாடும் செய்யவில்லை. அதனல் உலகத்தில் எந்நாடும் நல்ல கல்வியை அளிக்கவில்லை. பெருந்தொகையினரான மாணுக்கருக்குமுன் ஆசிரியர்ஒருவரே இருப்பின், அவரால் சில கருத்துக்களையே கற்பிக்கமுடியும் ; ஆயின், ஆழ்ந்த கல்வியை அளிக்க முடியாது ; ஒவ்வொரு மாணுக்கனுக்கும் தனித்தனியே கற்பித்தல் இயலாது வகுப்பில் உரியதொகைக்கு மேற்பட்ட மாணுக்கர் இருப்பின், கற்பிக்கும் முறையின் தரம் தாழ்ந்துவிடும். பெரிய வகுப்புக்கள், 'பரிசோதனை' செய்யவேண்டிய பாடங்களில், மாணுக்கருக்கு வேண்டிய உரிமையை அளிக்கமாட்டா. இக் கருத்துக்களை நாம் எடுத்துக்கூறின், அரசாங்கங்கள் பேச்சளவில் தங்கள் சம்மதத்தைத் தெரிவிக்கின்றன. அவற்றுள் மிகச் சிலவே போதிய அளவு ஆசிரியர்களை நியமிக்கத் திட்டமிட்டுள்ளன. இன்னும் அத் திட்டத்தை நிறைவேற்றியபாடில்லை.

தலைசிறந்த முறையில் கற்பித்தற்கு வேண்டும் பொருள்கள் : தலைசிறந்த ஆசிரியர்கள் :

இதற்கு மூன்ருவதாக வேண்டப்படுபவர் தலைசிறந்த ஆசிரியர்களே. முதல்தர ஆசிரியர்கள் இன்றி, முதல்தர மாணுக்கரை எதிர்பார்த்தல் பொருளற்றதாகும். ஆசிரியர்களைவிட எக்கல்வியும் உயர்ந்ததாகாது. அரசாங்கங்கள் இதனை மறந்துவிடுகின்றன. கல்வி திருப்தியாயில்லை என்று மக்கள் முணுமுணுத்துக் குறைகூறின், அரசாங்கங்கள், கற்பிக்கும் முறைகள், பாடத்திட்டங்கள் முதலிய எல்லாவற்றையும் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சீர்செய்ய முனைவர் ; ஆயின், எதனை முதலில் கவனிக்க வேண்டுமோ அதனைக் கவனியார் ; தலைசிறந்த ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து நியமனஞ்செய்தல் என்னும் அக் கடமையைப் புறக்கணித்து விடுவர்.

"கற்றுணர்தற்கு அறிவும் ஆற்றலும் இல்லாதவர் ஆசிரியர்தொழிலை மேற்கொண்டுள்ளனர் !" என்று ஆஸ்கார் ஒயில்ட் என்னும் அறிஞர் பரிகாசஞ்செய்து எழுதுவதில் வியப்பொன்றுமில்லையே ! அவரையொட்டி பர்னாட் ஷா என்னும் புலவர் "சக்தியுள்ளவன் பிறவேலைகளைச் செய்வான்; சக்தியற்றவன் ஆசிரியனுகின்ருன் !" என்று கூறியுள்ளார். ஆசிரியராய் இருத்தற்குத் தனித்தகுதியொன்றும் வேண்டுவதில்லை ; யாரும் ஆசிரியராக இருக்கலாம்'- என்னும் மனப்பான்மையே அரசாங்கங்கட்கு உளது! ஜாடியில் பாலை ஊற்றுவதுபோன்று, குழந்தையின் மனத்தில் சிறிது அறிவினைப் புகுத்துதலே கல்வியாயின், யாரும் ஆசிரியராகலாம் ! அதனை, அம்முறையில் புத்தகங்கள், யந்திரங்கள், தபாற்கடிதப்போக்குவரத்து முதலியவை செய்யக்கூடும் ! ஆசிரியரே வேண்டுவதில்லையே ! ஆயின் கல்வி, தற்காலவறிவினையூட்டுவதாய், பரிசோதனை, ஆராய்ச்சி, புதியவற்றைக் கண்டுபிடித்தல், தாமே கற்றறிதல் மனிதத்தன்மையை ஊட்டுதல் இவற்றிற்கு ஊக்கமளிப்பதாய் இருத்தல்வேண்டும் எனின், ஆசிரியரனைவரும் சான்றோராகவே இருத்தல் வேண்டும்.

(அடுத்த இதழில் முற்றுப் பெறும்)